விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 06 ஞாயிற்றுக்கிழமை (22.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338




## ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரீசிய புனிட்டாசிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

என்ன காரணத்திற்காக இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்பது குறித்துத் தகவல்கள் வெளியிடப்படவில்லை. எவ்வாறெனினும் ஜெனரல் சரத் பொன்சேகா அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்தாரா? இல்லையா?என்பது குறித்துக் கருத்து வெளியிட முடியாது என அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கை (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்து பிரசாரத்தை ஆரம்பிப்பதற்கு சரத் திட்டம்

(கொழும்பு)

தேர்தல் அலுவலகம் ஒன்றை அடுத்த வாரம் திறப்பதற்கும் அதனைத் தொடர்ந்து பிரசாரப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் ஓய்வு பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;


தேர்தல் அலுவலகம் ஒன்றை அடுத்த வாரம் திறப்பதற்கு ஜெனரல் சரத் பொன்சேகா திட்டமிட்டுள்ளார். கொழும்பிலுள்ள முக்கியமான பாடசாலைகளில் ஒன்றான றோயல் கல்லூரிக்கு அண்மையாக இந்த அலுவலகம் திறக்கப் (16 ஆம் பக்கம் பார்க்க)

# நலன்புரி முகாமிலுள்ள மக்களுக்கு டிசம்பர் முதல் நடமாடும் சுதந்திரம்

## பசில் ராஜபக்ஷ எம்.பி. அறிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடனான போரின் போது அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் ஏற்படுத்தும் முகமாக, எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து அனைத்து நலன்புரி நிலையங்களும் திறந்த முகாம்களாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த வருடம் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன் அனைத்து மக்களும் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.** (16 ஆம் பக்கம் பார்க்க)



## உள்ளே...

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா எழுதிய
யாழ்ப்பாணத்துப் பண்பாடு
மறந்தவையும் மறைந்தவையும்

நாளை முதல்
வாசகர்கள் மத்தியில் பெரும்
எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள
'விவாத அரங்கு'

## வெளிமாவட்டங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை நேற்று திடீரென அதிகரிப்பு!

### ஆயிரத்து 655 பேர் 30 பஸ்களில் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி முறை நீக்கப்பட்டதையடுத்து வெளிமாவட்டங்களுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நேற்று பயணத்தை மேற்கொள்வதற்காக புகையிரத நிலையத்தில் கூடிய சுமார் 3 ஆயிரம் பேரில் ஆயிரத்து 655 பேர் 30 பஸ்களில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனையவர்களை இன்று வருமாறு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இது தொடர்பில் யாழ்.சிவில் நிர்வாகக் காரியா லயத்தில் இருந்து தெரியவருவதாவது, யாழ். மாவட் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது அழுத்தத்தை ஏற்படுத்த பொதுநலவாய நாடுகளுக்கு அழுத்தம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அரசியல் தலைவர்கள் இலங்கையில் மோசமடைந்துள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய விவகாரங்கள் தொடர்பில் அதிக அக்கறைகள் காண்பிக்க வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

நாளை தொடக்கம் 26 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் நாடுகளின் அரசியல் தலைவர்களின் கவனத்திற்கு என அனைத்துலக மன்னிப்புச் சபை வெளியிட்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் தொடர்பான அறிவிப்பை தள்ளிப்போடும் மாவீரர் நாள்?

(கொழும்பு)

அரசாங்கம் தேர்தல் தொடர்பான அறிவிப்பைத் தள்ளிப் போடுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாளே காரணம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில்;

மாவீரர் நாளான எதிர்வரும் 27 ஆம் திகதி வழமைபோலவே கொள்கை விளக்கவுரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் விடுதலைப்புலிகளின் கொள்கைப் பிரகடனம் எவ்வாறு வெளியிடப்படவுள்ளது என் (16 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்
தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக
www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

(C-3757)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



தேசிய சேமிப்பு வங்கியின் நெல்லியடிக் கிளை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் சுனில் பெரேரா, மேலதிக பொதுமுகாமையாளர் தென்னக்க பண்டார ஆகியோர் மங்கல விளக் கேற்றுவதையும், வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) திருமதி குஸ்மா அமரதுங்கா வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து வைப்புப்பணத்தைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# தமிழ்தேசியக் கூட்டமைப்பில் பிளவு; அரசாங்க சார்புக் குழு உருவாக்கம்!

## இந்தியன் எக்ஸ்பிரஸ் தகவல்

(கொழும்பு)

தமிழ் கூட்டமைப்பு மூன்றாக பிளவு படுகிறது. ஆனால் அரசசார்பு குழு வொன்று அதிலிருந்து வெளிக்கிளம்பியுள்ளது என்று புளொட் தலைவர் த.சித்தார்த்தன் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்த கதாநாயகனான ஜெனரல் சரத் பொன்சேகா ஒன்று பட்ட எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டால் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்கு வங்கி உடைந்து விடும் என்ற அச்சத்தால் அதனால் ஏற்படும் இழப்புகளை, சாத்தியப்பாட்டை ஈடுகட்டுவதற்கு சிறுபான்மை தமிழர்களை கவர்ந்திழுக்கும் முயற்சிகளில் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இப்போதுஈடுபட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கமான போக்கை கடைபிடிக்க அரசாங்கம் இப்போது முயற்சிக்கிறது. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப்பத்திரம் இல்லாமல் இப்போது குடாநாட்டுத் தமிழர்கள் பயணம் செய்ய முடியும் என்று அரசாங்கம் கூறியுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டுக்கு எதிராக முன்னணித் தமிழ் அரசியல் வாதி ஒருவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் தொடர்பான மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

முன்னர் எதிர்க்கட்சி எம்.பிக்கள் குறிப்பாக தமிழ்க்கட்சிகளை சேர்ந்த எம்.பிகள் அகதி முகாம்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை.

அந்தத்தடை அண்மையில் நீக்கப்பட்டு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு அண்மையில் அரச வழிகாட்ட லுடன் முகாம்களுக்குச் சென்று திரும்பியிருந்தனர்.

2005இல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சிங்கள மக்கள் மத்தியிலான பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் மட்டும் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றிருந்தார்.

ஆனால் இந்தத் தடவை பொன் சேகா விவகாரத்தில் அந்த ஆதரவு உத்தரவாத மற்றதாகவுள்ளது என்றுள்ளது. (ச-5)

## நலன்புரி விற்பனை நிலையத் திறப்புவிழா

(அல்வாய்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை கட்டைவேலி சேகரத்தின் பெண்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை முதலாம் கட்டை தம்பசிட்டி வீதியில் அமைக்கப்பட்டுள்ள வசந்தம் நலன்புரி விற்பனை நிலையத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகரம் முகாமைக் குரு அருட்திரு என்.அருள்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் வி.வரதீஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறை முகாமையாளர் திருமதி சுமங்களா பிரபாகரன், இலங்கை வங்கி பருத்தித்துறை கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் திருமதி உமா வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4,19)

## ஸ்ரீ சத்திய சாயி பகவானின் 84ஆவது பிறந்தநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 84 ஆவது பிறந்தநாள் விழா நாளை திங்கட் கிழமை கொக்குவில் ஸ்ரேசன் வீதி சத்திய சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 6.00 மணி தொடக்கம் ஓங்காரத் சுப்பிரபாதம், பிரசாந்திக் கொடியேற்றம், பஜனை, நடனம், நாடகம் பரிசு வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஓ-9)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை மணிக்கூட்டு வீதி அரசடி அருள்மிகு ஸ்ரீ விநாயகப் பெருமான் தேவஸ்தான பிராயச்சித்த சம்புரோஷண கும்பாபிஷேகமும் புதிதாக அமைக்கப்பெற்ற மூலதாரக் கணபதிக்குக் பிரதிஷ்டா கும்பாபி ஷேகமும் இன்று தேவேந்திர முகூர்த்தமான நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-3)

# உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து வெளியேற பொன்சேகாவுக்கு காலக்கெடு விதிக்கவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறுமாறு எவ்வித காலக்கெடுவினையும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு விதிக்கவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகாவை உடனடியாக உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் கோரியுள்ளது என வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என அரசாங்க ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தனிப்பட்ட ரீதியில் இல்லமொன்றை தேடிக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளும் அடிப்படையற்றவை.

படைவீரர்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களில் உண்மையில்லை. ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தேவைக்கு அதிகமானளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வடக்கில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதிக் கால கட்டத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டில் இருக்கவில்லை என செய்திகள் வெளியாகியுள்ளதாகவும் இது குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்படும் எனவும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ராஜீவவிஜேசிங்க தெரிவித்துள்ளார். பொதுவான வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிட உள்ளதாக செய்திகள் வெளியானது முதல் உயிர் அச்சுறுத்தல் தொடர்பான வதந்திகளும் வெளியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான தகவல்களை வெளியிடுவோர் குறித்த தகவல்களை வெளியிடுவதற்கு முன்னர் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவிக்க வேண்டியது அவசியமானதென இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சும் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணை களைநடத்துவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# இலவச பாட நூல்களை இன்று பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2010ஆம் கல்வி ஆண்டுக்கான இலவசப்பாட நூல்களை யாழ். இந்துக்கல்லூரியில் இன்று காலை 8 மணிக்கு பெற்றுக் கொள்ளுமாறு சகல கோட்டக்கல்வி பணிப் பாளர்களுக்கும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு 2010ஆம் ஆண்டு கல்வியாண்டில் விநியோகிப்பதற்கென கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் தொகுதி பாடநூல்கள் ஏ-9 வீதி யூடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டது. இரண்டாவது தொகுதி பாட நூல்கள் ஏ-9 வீதியூடாக நேற்றிரவு யாழ்.செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

இந் நிலையில் அடுத்த ஆண்டுக்குரிய இலவச பாடநூல்களை யாழ். மாவட்டத்தில் சகல கோட்டக்கல்விப் பணிப்பாளர்களும் இன்று காலை 8.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் கேட்டுள்ளார். (ச-5)

## விஞ்ஞான சங்கத்தின் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 13 இல் கல்வி கற்கும் மாணவர்களின் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை நாளை நடைபெறுகின்றது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் சகல வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். எனவே பாடசாலை அதிபர்கள் வினாத்தாள்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சையை நடத்துமாறும் அவர் கேட்டுள்ளார். (ச-5)

ராஜீ திருமணசேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் 30 வயது ஆயிலிய நட்சத்திரம் செவ்வாய் குற்றமுள்ள B.Sc பட்டதாரி உயர் பதவி வகிக்கும் மணமகனிற்கு பட்டதாரி/அரச பணியிலுள்ள மணமகள் தேவை.

தொடர்பு: 158/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021-373 5980, 077 4745647

(3963)

தென்மராட்சி மக்களுக்கோர் நற்செய்தி!

லண்டன், சுவிஸ், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி, நோர்வே, டென்மார்க், சிங்கப்பூர், துபாய், நியூசிலாந்து, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இந்தியா ஆகிய பதினாறு நாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு நீங்கள் விரும்பும் DVD,CD மற்றும் புடைவை வகைகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை துரிதமாகவும், பாதுகாப்பாகவும் அனுப்பிவைக்க உங்களுக்காக...

இல. 14, நவீன சந்தை (மேல்மாடி) சாவகச்சேரியில்
கடந்த 19.11.2009 வியாழக்கிழமை முதல்

S.V.N.ENTERPRISES

எனும் ஸ்தாபனத்தை திறந்து வைத்துள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குமான பொதிகள் கொண்டு செல்லும் லொறி போக்குவரத்துச் சேவையினையும் நாம் ஆரம்பித்துள்ளோம் என்பதையும் மிக்க மகிழ்வோடு அறியத்தருகிறோம்.

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்: 021 5672015, 021 5672016, 0777279691

(C-3962)

# ஆசிரியர் இடமாற்றம் அவசியமா?

## விவாத அரங்கில் பங்குபற்றுவோர்



க.இதயராஜ் | தி.கமலசுதர்சன் | ந.கணேசராசா | தெ.ஹர்சன்



ப.உதயகுமார் | பரா.றமேஸ் | கே.எஸ்.ரமணன் | சீ.தாரகன்



பிரிந்தா | தயாளினி | விஸ்வலிங்கம் | சாந்தினி

**நாளைய வலம்புரியில் விவாதம் தொடங்குகிறது**

# பயம் காட்டிக் கொடுக்கும் உண்மைகள்!



" நீங்க யானைக்கு பயன்படுவீர்களா? பூனைக்கு பயப்படுவீங்களா?'' இந்தக் கேள்வியை சின்னப்பிள்ளைகள் ஒருவருக் கொருவர் கேட்டு விளையாடுவார்கள்.

"நீங்கள பயப்படுவீங்களான்னு கேட் டால், பலர் உண்மையைச் சொல்ல மாட்டார் கள். சிலர் "நான் யாருக்கும் பயப்படமாட்டேன்" என்று சொல்லிவிட்டு இருட்டினால் வீட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள்.

உண்மையைச் சொல்லாவிட்டாலும் இந்தக் கருவி நீங்கள் பயந்தாங்கொள்ளி ஆசாமி என்பதை கண்டுபிடித்துவிடும். ஆமாம், பயத்தைக் கண்டு பிடிக்கும் கருவி வந்துவிட்டது.

'' பயத்தை கண்டுபிடித்து என்ன செய்வது? பயப்படாமல் இருக்க ஏதாவது மருந்து கண்டு பிடிச்சா நல்லா இருக்கும் என்று நினைக்கிறீங்களா?'' அப்படிஇல்லை, ஒருவரின் பயத்தை வைத்து பல உண்மைக ளைக் கண்டுபிடிக்கலாம் என்று விஞ்ஞா னிகள் சொல்கிறார்கள். நீங்கள் என்ன மன நிலையில் இருக்கிறீர்கள் என்பதைக் கண்டு பிடிக்கலாம். தீவிரவாதிகளையும் அடையாளம் காணலாம்.

முறுக்கு மீசை, முகத்தில் தழும்பு இதெல்லாம் பழைய பட வில்லன்களுக்குத்தான் பொருந்தும். இப்போதெல்லாம் சமூக விரோதிகள் சாதாரண மனிதர்களோட மனிதராக கலந்துவிட்டார்கள். எந்தவிதத்திலும் சந்தே கம் இல்லாதபடி நடந்துகொள்கிறார்கள். அதனால் தான் தீவிரவாதிகளைக் கண்டு பிடிப்பதும், அழிப்பதும் அரசாங்கத்துக்கு பெரிய தலைவலியாக இருந்து வருகிறது.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்தான் இந்தப் பயம்கண்டுபிடிக்கும் கருவி (பியர் டிடெக்டர்) பயன்படுத்தப்படவுள்ளது. ஒரு வரது உடலில் இருந்து வெளிப் படும் வியர்வை வாசனையை வைத்தே அவர் எப்படிப்பட்டவர் என்று இது முடி வு கட்டி விடும்.



சாதாரண நேரங்களை விட பயம் வரும் போதுதான் நமக்கு அதிகமாக வியர்க்கும். அந்த வாசனையில் குற்றவாளிகளுக்கும் நமக்கும் வேறுபாடு உண்டு. அந்த மாற்றத் தை வைத்து தீவிரவாதிகள், குற்ற எண்ணம் உடையவர்களை " பியர் டிடெக்டர்" கருவிகண்டுபிடித்துவிடும். வருங்காலத்தில் நிறையக் குற்றங்களை இந்தக்கருவி தடுக்கும் என்று இதை உருவாக்கிய விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.



# சிங்கப்பூர் தொழிற்துறையை கவரும் நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசம்

(கொழும்பு)

நாட்டின் வடக்குக் கிழக்கின் தொழிற்துறை அதிகரிப்பு சிங்கப்பூர் தொழிற்துறையை கவர்ந்துள்ளதாக சிங்கப்பூர் வர்த்தகக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் தேசிய வர்த்தகக் கழகத்துடன்(என்.சி.சி) நடைபெற்ற சந்திப்பின்போது முதலீட்டு வாய்ப்புகளைக் கேட்டறிந்து கொண்டதாகவும், இச் சந்திப்பு வெற்றிகரமாக அமைந்ததாகவும் சிங்கப்பூர் இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் தலைவர் விஜய் ஐயங்கார் தெரிவித்தார்.

மேற்படி குழுவினர், இலங்கை முதலீட்டு சபையினரையும் ,ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல். பீரிஸையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

விவசாயம்,புடைவை,மின் உபகரணம்,வீட்டுத்துறைஅபிவிருத்தி, உணவு உற்பத்தி, சக்தி, மரத்தளபாட மற்றும் மீன்பிடி போன்ற துறைகளில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளை குழு ஆராயும் எனவும் ஐயங்கார் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தகக் கூட்டமைப்பானது ,சிங்கப்பூர் வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து வடக்குக் கிழக்கில் சக்தி வளத் துறையையும் மீன்பிடித் துறையையும் முன்னேற்றுவதனூடாக விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதனூடாக அப்பகுதியின் அபிவிருத்திக்கு உதவ முடியும் எனத் தெரிவித்தது.

இதேவேளை சிங்கப்பூர் உயர் கைத்தொழில்நாடாகவும் சராசரி வருடாந்த வளர்ச்சி 7.5 வீதமாகவும் 716 பில்லியன் சிங்கப்பூர் டொலர் வர்த்தகத்தையும் கொண்டுள்ளது. இலங்கையை சிறந்த முதலீட்டுக்குரிய நாடாக சிங்கப்பூர் கருதுகின்றது எனவும் ஐயங்கார் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் வேலையற்றோர் வீதம் 5.2% ஆகவும் 62ஆவது நாடாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் வேலையற்றோர் வீதம் 2.2 என்பது குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக செய்தித் துளிகள்

### டயலொக் உயர்வு

டயலொக் 3ஆம் காலாண்டு முடிவில் இலாபமாக 2.35 பில்லியன் ரூபாயை இலாபமாக் காட்டியுள்ளது. இதேவேளை டயலொக்கின் மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 63 இலட்சமாக உயர்ந்துள்ளதாக டயலொக் தெரிவித்துள்ளது.

### லங்கா ஐ.ஓ.சி.நட்டம்

லங்கா இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் 100 கோடி ரூபாய் நட்டத்தை 3ஆம் காலாண்டு முடிவில் எதிர்நோக்கியுள்ளதாக நிறுவன முகாமைத்துவ இயக்குநர் சுரேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

### உலக வங்கி சீமாவுடன் ஒப்பந்தம்

இங்கிலாந்தின் பட்டயக் கணக்காளர் நிறுவனம்(சீமா) உலக வங்கியுடன் தொழிற்துறைசார் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இதன்படி இந்நிறுவனத்தின் கணக்காளர்கள் நிதி மற்றும் கணக்கீட்டு துறையில் உலக வங்கியில் பயிற்சியைப் பெறமுடியும்.

இதற்கான ஆரம்ப வைபவம் அண்மையில் வாஷிங்டனில் உள்ள உலக வங்கியின் தலைமையத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




# எச்.என்.பியின் கட்டுப்பாடு தொடர்ந்து ஹரி ஜெ.இடமே!



(கொழும்பு)

இலங்கையின் பிரபல வர்த்தகர் ஹரி ஜெயவர்த்தன தொடர்ந்து எச்.என்.பியின் பிரதான பங்குதாரராக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தெரியவருவதாவது;

ஹரி ஜெயவர்த்தனவும் அவருடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுமாக ஹற்றன் நஷனல் வங்கியின் 30.02 வீத பங்கைக் கட்டுப்படுத்துகிறார்கள். அதற்கு அடுத்து டி.பி.ரி.சி.ஏயானது 15 வீத பங்குடன் இரண்டாவது பெரிய பங்குதாரராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எச்.என்.பி. மூன்றாவது காலாண்டு வரிக்குப் பிந்திய லாபமாக 2.68 பில்லியன் ரூபாய்களைக் காட்டியுள்ளது. இது 2008 இல் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 5 வீத அதிகரிப்பாகும்.

## செலானின் 10 வீதம் செந்தில்வேலிடம்

செலான் வங்கியில் முதலீட்டாளரான டாக்டர் செந்தில்வேலின் பங்குகள் பத்து வீதமாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் செலான் வங்கியின் பெரிய தனியாள் பங்குதாரராக செந்தில்வேல் உள்ளார்.

இது குறித்து செந்தில்வேலின் பங்குத்தரகர் குறிப்பிடுகையில், செலான் வங்கியில் செந்தில்வேல் 8,493,466 பங்குகளைக் கொண்டுள்ளார் எனவும் பத்து வீதம் வாக்களிக்கும் உரிமையுடைய பங்குகள் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை செலான் வங்கியில், பிறவுண் குறூப் மற்றும் எல்.ஓ. எல்.சி.குறூப் என்பன தனித்தனியாக 10 வீத பங்குகளைக் கொண்டுள்ளதுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பன மற்றைய பெரிய பங்குதாரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.48 | 114.99 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 188.14 | 191.69 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.36 | 171.84 |
| சுவிஸ் பிராங் | 110.91 | 114.10 |
| கனேடிய டொலர் | 105.64 | 108.76 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.35 | 105.91 |
| சிங்கப்பூர் டொலர் | 81.35 | 83.07 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.46 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.10 | |

# அமெரிக்காவில் சிறந்த தொழில்கள் பட்டியல் படுத்துகிறது சி.என்.என்.!

(நியூயோர்க்)

அமெரிக்காவின் சி.என்.என். ஊடக நிறுவனம் மற்றும் மணி அண்ட் பேஸ்கேல்.கொம் இணைந்து 2006 முதல் 2016 வரையான காலகட்டத்தை எடுத்து, அமெரிக்காவில் எந்தெந்த் தொழில்கள் கேள்வியுடையதாக இருக்கும். அதிக சம்பளம் மற்றும் வளர்ச்சிக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் போன்ற காரணிகளை கவனத்தில் எடுத்து பட்டியல் படுத்தியுள்ளது.

தொலைத்தொடர்பு வலையமைப்பு பொறியியலாளர், தனியாள் நிதி ஆலோசகர் போன்ற தொழில்கள் அதிக கேள்வியுடைய தொழில்களாக மாறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் 50 இடங்களில் உள்ள தொழில்கள் வருமாறு;

தொழில்கள் தற்போதய கேள்வியுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. (அவற்றின் எதிர்கால வளர்ச்சி எதிர்பார்ப்பு 10 வருடங்களுக்கானது %இல் தரப்படுகிறது)

1.சிஸ்ரம் பொறியியலாளர் (45%), 2.பிசிக்கன் அசிஸ்டன் (27%), 3.கல்லூரிப் பேராசிரியர் (23%), 4.தாதிய பயிலுநர் (23%),5.தகவல் தொழில்நுட்ப செயற்றிட்ட முகாமையாளர் (16%),6.பொதுக் கணக்காளர் (18%),7.பிசிக்கல் தெரபிஷ்ட் (27%),8.கணனி/வலையமைப்பு பாதுகாப்பு ஆலோசகர் (27%), 9.புலனாய்வு ஆய்வாளர் (15%), 10.விற்பனைப் பணிப்பாளர் (10%), 11.வைத்தியர்(14%),12.மென்பொருள் அபிவிருத்தியாளர் (28%), 13.பாமசிஸ்ட் (22%), 14.ஒக்கியுபேசனல் தெரபிஸ்ட் (23%), 15. தாதியர் (23%), 16.மென்பொருள் தயாரிப்பு முகாமையாளர் (28%),17.தகவல் தொழில்நுட்ப வர்த்தக ஆய்வாளர் (29%), 18.சட்டத்தரணி (11%), 19.பொது வைத்திய நிபுணர் (14%), 20.மனித வள முகாமையாளர் (13%),

21.சிரேஷ்ட நிதி ஆய்வாளர் (34%), 22.குழந்தைகள்;பெண்கள் வைத்திய நிபுணர் (14%), 23.உளவியல் வல்லுநர் (16%), 24.மனநல வைத்திய நிபுணர் (14%), 25.கால்நடை வைத்திய நிபுணர் (35%), 26.சந்தைப் படுத்தல் முகாமையாளர் (14%), 27.பேச்சு–மொழி பரிசோதகர் (11%), 28.தொழில்நுட்ப எழுத்தாளர் (20%), 29.நிதி முகாமையாளர் (13%), 30. தொலைத் தொடர்பு வலையமைப்பு பொறியியலாளர் (53%),

31. தொலைத்தொடர்பு முகாமையாளர் (17%), 32.ஹோட்டல் பொது முகாமையாளர் (12%), 33.பிணை வர்த்தகர் (25%), 34.கணக்கீட்டு வல்லுநர் (10%),35.கல்வி;பயிற்சி ஆலோசகர்(22%), 36.தொழிற்றுறை சட்ட உதவியாளர் (29%), 37.தரக் கட்டுப்பாட்டு பொறியியலாளர் (20%), 38. உ/தி தரக்கட்டுப்பாட்டுப் பொறியியலாளர் (20%), 39.கணனி மென்பொருள் செயற்றிட்ட முகாமையாளர் (28%), 40.கணனி பிரயோக வடிவமைப்பு ஆய்வாளர் (29%),

41.சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் (18%), 42.வர்த்தக சொத்து முகாமையாளர் (15%),43.ஆக்க இயக்குநர் (26%),44.மருந்தக விற்பனைப் பிரதிநிதி (12%),45. முதலீட்டு வங்கியாளர் (34%), 46.பயிற்சி மற்றும் அபிவிருத்தி முகாமையாளர் (16%),47.உற்பத்தி சந்தைப்படுத்தல் முகாமையாளர் (14%), 48.தரநம்பிக்கை முகாமையாளர் (16%), 49.நிதியாய்வு ஆய்வாளர் (34%), 50.வெளியக விற்பனைப் பிரதிநிதி (12%) என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 2933.34 | (-27.43) |
| மிலங்கா விலைச்சுட்டி | 3333.56 | (-27.88) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 580.861 | |

***உயர்வடைந்த பங்குகள்*** :சென்றல் இன்டஸ்ரீஸ்,எம்.ரி.டி வோல்கர்,சிலோன் தியேட்டர்ஸ் ,த பினான்ஸ் கம்பனி ,ரீஸ் அக்குறோ, ஈ–சலஞ்சிங்.

***சரிவைக் காட்டிய பங்குகள்*** : லங்கா அசோக் லேடன்,புளூ டைமண்ட்ஸ்,ஏசியன் அலைன்ஸ் இன்சுரன்ஸ், ஜனசக்தி, மேர்ஷண்ட் வங்கி ,சிலோன் றொபாக்கோ ,ஜோன் கீல்ஸ்.

# வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையரால் 37ஆயிரம் கோடி ரூபாய் அனுப்பிவைப்பு!

## – வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு அல்லாத நாடுகளில் உள்ள 15 இலட்சம் வலுவான இலங்கைத் தொழிலாளர்கள் 3.3 பில்லியன் அமெரிக்க டொலர் (அண்ணளவாக 37 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய்) அந்நியச் செலாவணியைக் கடந்த பத்து மாதங்களில் இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வெளிநாட்டில் உள்ள 15 இலட்சம் இலங்கைத் தொழிலாளர்களில் 5இலட்சத்து 50ஆயிரம் பேர் சவுதி அரேபியாவில் வேலை பார்க்கின்றனர். இவர்களில் 70வீதம் பெண்தொழிலாளர்களாகவும் 60வீதத்துக்கு மேல் வீடு சாராத தொழில்களிலே உள்ளனர்.

அடுத்து அதிகபடியாக 4இலட்சம் தொழிலாளர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் வேலை பார்க்கின்றனர். அண்ணளவாக 2 இலட்சத்து 25 ஆயிரம் பேரைக் கொண்டு குவைத் 3–வது பெரிய தொழில்வழங்குநராக உள்ளது.

2008 ஆம் ஆண்டு 2.8பில்லியன் டொலரை அனுப்பினர். இது இந்த முதல் பத்து மாதங்களில் 3.3 பில்லியனாக அதிகரித்துள்ளது என்றார்.

ரணவக்க மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாடுகளின் கவரக்கூடிய சம்பளங்கள் இந்நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடத் தூண்டுகின்றன. மருத்துவ வசதிகள், வங்கிக் கடன் மற்றும் காப்புறுதி போன்ற பல நலத் திட்டங்களைப் பணியகம் நடைமுறைப்படுத்துகின்றது. அத்துடன் பணிக் காலத்தில் ஏற்படும் உயிரிழப்பு அல்லது அங்கவீனம் போன்றவற்றுக்கு நட்டஈட்டுத் திட்டமும் உண்டு. இதற்கு மேலாக தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தொழிற் பயிற்சித் திட்டத்தையும் பணியகம் நடைமுறைப் படுத்துகின்றது எனத் தெரிவித்தார்.

இதேவேளை 40 வீதமான இலங்கைத் தொழிலாளர்கள் மத்திய கிழக்கு அல்லாத நாடுகளான சைப்பிரஸ், மாலைதீவுகள், கொங்ஹொங் ,இத்தாலி மற்றும் சிங்கப்பூர் போன்றவற்றில் பணிபுரிகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு இலங்கையில் அதிகரிக்கும் வாய்ப்பு

உலக நிதி நெருக்கடியில் இருந்து உலகம் மீண்டுவரும் இந் நிலையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குறிப்பாக இலங்கையில் முதலீட்டுக்குரிய வாய்ப்பு உருவாகியுள்ளதாக ,கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற தேசிய காப்புறுதி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பிணைகள் மற்றும் பங்குப்பரிவர்த்தனை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சந்தன டீ சில்வா தெரிவித்தார்.

நாடு இப்போது முதலீட்டுக்கு விரைவானதும் செயல்திறனுமான இடமாக மாறியுள்ளது எனவும் தெரிவித்தார்.


கு.முருகதாஸ்

# யாழ்ப்பாணத்துப் பண்பாடு

## மறந்தவையும் மறைந்தவையும்

1

### யாழ். பல்கலைக்கழகத்தில் 20.11.2009 இல் நடைபெற்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுப் பேருரை



**யா**ழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள் என்பதை நோக்குவதற்கு முன்னர், பண்பாடு என்றால் என்ன? என்பதை வரையறை செய்து கொள்வது அவசியமாகும். பண்பாடு பற்றிய ஆய்வினை மேற்கொண்ட மேலைப் புல அறிஞர்கள் 160க்கும் மேற்பட்ட வரையறைகளைத் தொகுத்துக் காட்டியுள்ளனர். அவற்றுள் எமக்குப் பொருத்தமான சிலவற்றை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்.

பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுதியாகும்.

"பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதர்கள் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்.

"பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடை முறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.

இவ்வாறு பண்பாடு பற்றிய வரையறைகளை மானிடவியல் ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். இவையெல்லாம் ஏதோ ஒருவகையில் பெருமளவுக்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு முன்னர், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் அமைவிடம் பற்றியும், புவியியல் அமைப்புப் பற்றியும் விளங்கிக் கொள்வது அவசியமாகும். சில அறிஞர்கள் பண்பாட்டைப் புவியியல் அடிப்படையில் அல்லது நிலப்பரப்பு அடிப்படையில் நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக, இலங்கைப் பண்பாடு, இந்தியப் பண்பாடு எனக் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டலாம் எனினும் இவற்றுக்கிடையே பல்வேறு வகையான வேறுபாடுகள் இருப்பது உணரப்பட்ட போதும் பொதுவாக இவ்வாறு அழைக்கும் வழக்காறு இன்றுவரை தொடர்கின்றது. பண்பாடு என்பது பன்மைத்தன்மை கொண்டது என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணப் பிரதேசம் என்னும் பெருவட்டத்துள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று முதலிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. இப்பிரிவுகளுக்கிடையே பண்பாட்டுக் கோலங்களிற் சிற்சில நுண்ணிய வேறுபாடுகள் அல்லது தனித்தன்மைகள் காணப்படுவது உண்மையே. எனினும் எல்லாப் பிரிவுகளுக்கும் உரித்தான பொதுவான பண்பாட்டு அம்சங்களையே இவ்வுரையிலே குறிப்பிடுகின்றோம்.

பண்பாடு என்றசொல், வாழ்க்கை முறை அல்லது வாழ்வியல் என்ற அர்த்தத்திலும் பயின்று வருகின்றது. தமிழிலே பண்பாடு என்ற சொற் பயன்பாடு மிக அண்மைக் காலத்திலேயே அறிமுகமானது. (CULTURE) என்ற ஆங்கிலப் பதத்திற்கு நாகரிகம் என்ற சொல்லே பெருவழக்காக இருந்தது. பழந்தமிழ் இலக்கியங்களிற் பண்பாட்டினைக் குறிக்கச் சால்பு என்ற பதமே கையாளப்பட்டுள்ளது என்பர்.

Culture என்ற ஆங்கில சொல்லுக்குப் பண்பாடு என்ற சொல் மிகப் பொருத்தமாகவும், சிறப்பாகவும் அமைந்திருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. வாழ்வியல் அல்லது வாழ்க்கைமுறைகள் எனப் பன்மையிலே சுட்டுவதும் பண்பாட்டின் பன்மைத்தன்மையை மனங்கொண்டே எனக் கருதலாம்.

பண்பாடு என்ற சொற்பொருள் வியாக்கியானம் இவ்வுரைக்கு முக்கியமானது அல்ல. எனினும் ஒரு முன்னீடாக இதனைக் குறிப்பிட்டோம்.

பண்பாடு பற்றிய ஆய்வினைச் செய்தவர்கள், பண்பாட்டைப் பொருள் சார் பண்பாடு, பொருள்சாராத பண்பாடு என இரண்டாகப் பாகுபாடு செய்வர். ஆய்வு வசதிக்காக இவ்வாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளபோதும், பொருள்சார் பண்பாடும் பொருள் சாராத பண்பாடும் ஒரே வழி ஒன்றிணைந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

ஒரு சமுதாயப் பண்பாட்டு முறையைத் தெளிவாக அறிந்து கொள்ள முதலிலே பொருள்சார் பண்பாட்டு கூறுகளின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்வது அவசியமெனப் பண்பாட்டு மானிடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பண்பாட்டு மானிடவியல் ஆய்வாளர் பக்தவற்சலபாரதி, பொருள்சார் பண்பாடு பற்றிப் பின் வருமாறு கூறுகின்றார்.

"ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பற்றிய (Material culture)தரவுகள் மிகவும் பயனுள்ளவை. வீடுகளின் அமைப்பு, செய்பொருள்கள், வீட்டுச் சாமான்கள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற்கருவிகள், சடங்குப் பொருட்கள் போன்ற பல்வேறு வகையான பொருட்களைப் பற்றிய தரவுகள், சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறியப் பெரிதும் உதவும்"

இந்த வகையிலே நோக்கும் பொழுது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருள்சார் பண்பாடுகள் யாவற்றையும் இவ்வுரையிலே விரித்துக் கூறுவது கடினமானது. குறிப்பிட்ட சில பொதுமைப்பண்புள்ள அதே வேளை, முக்கியமானவை எனக் கருதும் பண்பாட்டுக் கோலங்கள் சிலவற்றை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இங்கு நான் சுட்டிக் காட்டப் போகும் பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றை நாம் இழந்து விட்டோம். சிலவற்றை மாற்றுருவத்தோடு பேணி வருகின்றோம். இன்னும் சிலவற்றைப் "பொய்யாய், பழங்கதையாய், கனவாய்" மெல்ல மெல்லப் போகவிட்டு விட்டோம். பண்பாடு என்பது ஒரு ஓட்டம். அது இயங்கியற் சாத்தியமுடையது. அது மாறுவது அல்லது மாற்றப்படுவது தவிர்க்கமுடியாதது. பண்பாடு என்பது மாறாத தன்மை கொண்டது என்ற கருத்தியலாளர்களும் உளர்.

பண்பாடு மாறுவதற்கு அல்லது மாற்றுருப் பெறுவதற்கு அல்லது மறைவதற்குப் பலகாரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்று மாற்றங்களும், இம்மாற்றங்களால் உருவான கல்வி, தொழில், உலகத் தொடர்கள் முதலானவையும், பண்பாட்டைக் கொள்ளலும், கொடுத்தலும் என்ற பரிமாற்றமுறையும் இந்நிலைக்குப் பிரதான காரணிகள் எனலாம்.

19 ஆம் நூற்றாண்டையும், இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியையும் ஆதாரமாகக் கொண்டே யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை இங்கு சுட்டிச் செல்லலாம் என எண்ணுகிறேன்.

"யாழ்ப்பாணச் சமூக அமைப்பென்பது அடிப்படையில் அதிகார அடுக்குகளை உடையது. இந்த அதிகார அடுக்குமுறை என்பது சாதிகளை அடிப்படையாகக் கொண்டது. யாழ்ப்பாணப் பாரம்பரிய சமூக அமைப்பென்பது பௌதிக ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் வேளாள முதன்மையுடையது. குடித்தொகையிலும் ஏனைய சாதியினரைவிட வேளாளர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

அத்துடன் காலனிய ஆட்சியும் வேளாளர்களது சமூக மேலாண்மையைப் பலப்படுத்துவதாகவே அடிப்படையில் இருந்தது.

ஒல்லாந்த, ரோமன் டச்சுச் சட்டம் முதல், காலனிய ஆட்சியுடன் முன்னணி பெற்ற புகையிலை முதலான காசுப் பயிர்களின் செய்கை - கல்வி - நிர்வாகம் முதலியன யாவும் அடிப்படையில் அமைந்ததை அவதானிக்க முடியும்.

(அடுத்த ஞாயிறு தொடரும்)



**அன்புக்குரியவர்களே!**

எங்கள் செழுங்கலை நியமமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற்துணை வேந்தராக கொலுவிருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் நினைவெழுதும் இந்தப் பொழுது பெறுமதியானது.

தமிழியலுக்கும் உயர் கல்விக்குமான மேலான பணிகளுக்கான போற்றுதலுடன், அவர் பெயரில் அமைந்த "வித்தியானந்தன் நூலகத்"தில் அவரின் உருவச் சிலையை நிறுவி, திறந்து வைக்கும் இந்நாளில் இந்த ஆண்டுக்கான நினைவுப் பேருரை இடம்பெறுவது பெருமகிழ்ச்சி தருகின்றது.

தமிழர் சால்பின் வேர்களைத் தேடியும் விழுதுகளைப் பேணியும் நின்ற பேராசானின் வாழ்வியலுக்கு நெருக்கமான பொருளில் இன்றைய நினைவுப் பேருரை அமைகின்றது.

கடந்தகாலம் பற்றிய உணர்வை இழத்தலின் ஆபத்து, வாழ்வின் அனைத்து முகங்களிலும் உணரப்படும் இவ்வேளை, யாழ்ப்பாணப் பண்பாடு : மறந்தவையும், மறைந்தவையும் எனும் பொருளில் பொருத்தமான இந்தப் பேருரையை எங்கள் தமிழ்ப் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நவீன வாழ்வின் மாற்றங்களிடை மரபுவழிப்பண்பாட்டின் செழுமையான அனுபவங்கள் பற்றிய மறதிக்குரிய மருந்தை உடன் கண்டாக வேண்டும். குடியேற்ற நாட்டாதிக்கம் தொடங்கி இன்றைய நவகுடியேற்றவாத – 'உலக மயமாக்க' அலைகள் வரை விழுங்கியுள்ள விழுங்குகின்ற சுதேச அடையாளங்களை மீட்டெடுக்கும் பண்பாட்டுப் பணி பேராசிரியர் சிவலிங்கராஜாவின் இன்றைய உரையின் வழி மீள் உயிர்ப்புப் பெற வேண்டும்.

வித்தியானந்தன் வழிவந்த சால்புகளுடன் பண்பாட்டு மேம்பாட்டுக்கான இலட்சிய வாழ்வில் பயணிக்கின்ற பேராசிரியர் சிவலிங்கராஜாவின் இக்காலப் பணியைப் பாராட்டுவோம்.


பண்பாட்டின் மறக்கக்கூடாத பக்கங்களை – பண்புகளை மீட்டெடுப்போம் ; மறந்துவிட வேண்டிய அநீதியான பக்கங்களை அகற்றிவிடும் உறுதியைப் பூணுவோம்.

எங்கள் பல்கலைக்கழகத்தின் மேன்மைகளினதும், எங்களது வல்லமைகளினதும் ஊற்றுக் கண்ணாகி, எங்களை வழிப்படுத்தும் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் நினைவுகளை என்றென்றும் காத்து நிற்போம்.

பேராசிரியர்
நாகலிங்கம் சண்முகலிங்கன்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# கல்விப் பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும்

02





சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

**சைவ மங்கையர் வித்தியாலயத்தின் ஆரம்பகால அதிபராக இருந்த செல்வி நாகம்மாள் காசிப்பிள்ளையின் ஞாபகார்த்த விழாவைச் (23.05.2009) சைவமங்கையர் கழகம் நடாத்திய போது அதில் கலந்துகொண்ட பேராசிரியர்சி.க.சிற்றம்பலம்''சைவக்கல்வி பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும் - ஒருநோக்கு'' என்ற பொருளில் ஆற்றிய உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்தம் இங்கு அறிமுகமாக முன்னர் இந் நாட்டு மக்கள் சைவவழிபாட்டு நெறிகளைப் பேணினர் என்பது தெளிவாகின்றது. பௌத்தத்தின் வருகையால் சிங்கள மக்களின் மூதாதையினர் பௌத்தத்தை தழுவினாலுங் கூட இவர்கள் முன்பொருகால் சைவர்களாக வாழ்ந்தனர் என்பதனை இன்றும் நாட்டார் வழிபாடாக இவர்கள் மத்தியில் நிலவும் சைவ சமய வழிபாட்டு நெறிகள் இதனை உறுதிசெய்கின்றன.

ஈழத்தில் சைவம் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையது என்பதை மேற்கூறிய சான்றுகள் மட்டுமன்றி, சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்ட நாயன்மார்கள் பதிகம் பாடுமளவுக்குப் புகழ்பூத்த சைவ வழிபாட்டிடங்களாக விளங்கிய கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

பல்லவ மன்னர் காலத்தில் ஈழத்துடன் தமிழகம் மேற்கொண்ட அரசியல், வாணிப, கலாசாரத் தொடர்புகள் சைவ சமய வளர்ச்சியை ஊக்குவித்தன. இதனாற்றான் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்குரிய திருமந்திரம் ஈழத்தினைச் ''சிவபூமி'' என அழைத்தது. கி.பி 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் சோழர்கள் ஈழத்தில் முக்கால் நூற்றாண்டுக்காலம் ஆட்சி செய்தபோது 'சைவசமயம்' மிக உன்னத நிலையில் பேணப்பட்டது.

சோழரால் இக்காலத்திற்றான் நாட்டின் பல பகுதிகளிலும் வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இன்றும் ஆய்வின்மூலமாகப் பொலநறுவையில் வெளிக்கொணரப்பட்ட சிவஸ்தலங்கள், இவற்றிலிருந்து வெளிக்கொணரப்பட்ட சைவசமய விக்கிரங்கள், சிவன், பார்வதி சிலைகள் ஆகியன மட்டுமன்றிப் புகழ்பூத்த சிவன் நடனச் செப்புத் திருமேனிகள் ஆகியனவும் அன்று சைவம் பெற்றிருந்த மேன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இன்றும் கொழும்பு நூதன சாலையிற் காணப்படும் வெண்கலப் படிமங்கள், குறிப்பாகச் சிவனது பல்வேறு மூர்த்தங்களை எடுத்தியம்பும் படிமங்கள், மட்டுமன்றி இக்காலக் கல்வெட்டுக்களில் அரச உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், வணிகர்கள் ஆகியோர் சைவ நிறுவனங்களுக்கு அளித்த அன்பளிப்புக்கள் போன்ற செய்திகள் இக்காலச் சைவத்தின் மேன்மையை விளக்குகின்றன.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கி.பி 1619 இல் போர்த்துக்கேயரால் யுத்த முனையில் தோற்கடிக்க்ப்படும் வரை நல்லூரை மையமாக வைத்து அரசோச்சியது யாழ்ப்பாண அரசு. நந்திக்கொடியும், நந்தி நாணயங்களும் இதன் அரச சின்னங்களாகும். அப்போது தமிழை வளர்க்க நல்லூரில் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டதோடு இவ்வரசினால் தமிழ் நாட்டு அறிஞர்களும் 'போஷிக்கப்பட்டனர். ஏட்டுப் பிரதிகள் யாவும் 'சரஸ்வதிமகால்' என அழைக்கப்பட்ட நூல் நிலையத்தில் பேணப்பட்டன. இக்காலத்தில் ஈழத்தின் வடபகுதியில் மட்டுமன்றிக் கிழக்குப் பகுதியிலும் தமிழில் நிர்வாகம் செலுத்திய வன்னிச் சிற்றரசுகள் காணப்பட்டன.

போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசு தோற்கடிக்கப்பட்டு யாழ்ப்பாண அரசின் பகுதிகள் இவர்களின் ஆளுகைக்கு கீழ் 1658 வரை நீடித்தபோது சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டதோடு வெளிப்படையாகக் சைவ அனுஷ்டானங்கள் மேற்கொள்வதற்கும் தடைவிதிக்கப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து வந்த டச்சுக்காரர் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் தமது ஆட்சியின் இறுதிப் பகுதியில் சைவ விரோத நடவடிக்கைகளைத் தளர்த்தியதன் விளைவாக இடிக்கப்பட்ட சைவ ஆலயங்கள் புனரமைக்கப்பட்டன. 1796 இல் டச்சுக்காரர்களிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஆங்கிலேயர் ஆட்சி 1948 ஆம் ஆண்டு வரை நீடித்தது. போர்த்துக்கேயர், டச்சுக்காரர் காலத்தில் வடகிழக்குப் பிராந்தியத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் தனித்துவம் பேணப்பட்டாலுங்கூட, ஆங்கிலேயர் காலத்திற்றான் வடகிழக்கு உட்பட நாட்டின் பிற பகுதிகளிலும் ஒரே நிர்வாகக் கட்டமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டன.

மேலை நாட்டவர் ஆட்சியில் சைவம் தளர்வுற்றது. ஆனால் அழியவில்லை. இவ்வாறு அழியாது பாதுகாத்த பெருமை ஆசிரியர்களது திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்கும், ஆலயங்களுக்கும் உரித்தாகும்.

அக்காலக் கல்வி முறையாகக் குருகுலக் கல்வி அமைந்தது. இதனையே மரபுவழிக் கல்வி அல்லது பாரம்பரியக் கல்வி எனவும் அழைப்பர். இதன் விளைவாகச் சைவ இலக்கியங்கள் பேணப்பட்டதோடு புதிய படைப்புக்களும் உருவாகின. புராண படனம் மூத்தோர் கல்வியை ஊக்குவித்தது. இம்மரபு வழிக் கல்வியில் நேர கால அட்டவணை இல்லை. பெரும்பாலும் ஆசிரியர்களது இல்லங்களே பாடசாலைகளாக விளங்கின. இவர்களுக்கு வேதனம் இல்லை. ஆனால் நன்றிக் கடனாக உபகாரமாகப் பொருட்கள் கைமாறப்பட்டன. பெரும்பாலும் சிறுவர்களுக்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும் காலையிலே தான் வகுப்புகள் நடைபெற்றன. நிலத்திலே வெண்மணலைப் பரம்பிக் கையாலே எழுது வது வழக்கம். புத்தகம், பென்சில், சிலேற் என்பன ஆரம்பத்தில் கிடையாது. வளர்ந்த மாணவர்கள் ஏடும் எழுத்தாணியும் பயன்படுத்தினார்கள். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேதான் புத்தகம், கொப்பி, பென்சில், பேனை ஆகியன நடைமுறைக்கு வந்தன. வயது வந்தோருக்கும் குடும்பத்தினருக்கும் இராப்பள்ளி நடப்பது வழக்கம். வாய்மொழி மரபாகவே கல்வி போதிக்கப்பட்டதால் அக்காலக் கல்வியில் மனனஞ் செய்தல் ஒரு முக்கிய அம்சமாகக் காணப்பட்டது.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்

இங்கு பாடத்திட்டங்களாக அரிவரி, ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள், நல்வழி, வாக்குண்டான், நன் நெறி, நீதிவெண்பா, நாலடியார், சதுரகராதி, வாழ்த்து மாலை, தொன்னூல் விளக்கப் புகழ்ச்சிமாலை, திருவள்ளுவமாலை, கணக்கு, அந்தாதி, நைடதம், சோதிடம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நிகண்டு, அரும்பொருள் விளக்கம், இராவணசித்தர் சூத்திரம், காவியம், நன்னூல், வைத்தியசாஸ்திரம், ஆகமம் முதலியன விளங்கின. இவற்றைவிட உயர்கல்வியில் மேலும் புலமை பெறுவதற்கு தொல்காப்பியம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, வீரசோழியம், யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் முதலிய இலக்கணநூல்களும் கற்பிக்கப்பட்டன. (தொடரும்)

## உள்ளூர் விமான சேவையில்

# புதிதாக 6 விமானங்களை சேவையிலீடுபடுத்த திட்டம்

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப உள்ளூர் விமான சேவையின் மேம்பாடு கருதி 6 புதிய சிறிய விமானங்களை விரைவில் சேவையில் ஈடுபடுத்த உள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுமார் 50 பேர் பயணம் செய்யக்கூடிய எம்.ஏ-60 என்ற இந்த சிறிய ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய 105 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் விமானப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சீன அரசாங்கம் 5 வருடங்களில் திரும்பச் செலுத்தக்கூடிய வகையில் கடனுதவியாக இந்த விமானங்களை வழங்க முன்வந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# முடமாவடி ஞானக்குழந்தை இல்லத்தின் வருடாந்த கலைவிழா

(திருநெல்வேி)

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள முடமாவடி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் ஞானவைரவர் சன சமூக நிலைய ஆதரவில் நடைபெறும் 09 ஆவது வருடாந்த கலைவிழா, நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முடமாவடி ஞானக்குழந்தை இல்லப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அகில இலங்கை சமாதான நீதவானுமான அமைப்பாளரும், சிறப்பு விருந்தினராக சில்வஸ்ரர் அலின்ரீன்யூட் (உதயன்) கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக நல்லூர் ஞானோதய வித்தியாலய அதிபர் திருமதி. பாலராணி ஸ்ரீதரன், கௌரவ விருந்தினர்களாக, பாலர் கல்விக் கழக செயலாளர் திருமதி. தெ. இரட்ணகோபால், யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் எஸ்.பி. காசிநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-03)

## சமய தீட்சை வழங்கல்

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள் தீட்சை வழங்கவுள்ளார். (ஓ-4-17)

✠✠✠

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அனுசரணையுடன், திருநெல்வேலி முத்துதம்பி மகா வித்தியசாலை மண்டபத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 8.00 மணி தொடக்கம் தீட்சை வழங்கும் நிகழ்வு சிவஸ்ரீ கைலாச நாதக்குருக்கள் தலைமையில் இடம் பெறும். (ஓ)




குருநகர் கியூமெடிக்கா பாலர்பாடசாலை சிறார்களுக்கென யாழ்.மாநகரசபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பாடசாலை உபகரணங்களை மாணவர்களிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்

## எட்டாந் திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் சாந்தி, சமதானத்தோடு வாழ வேண்டுமெனப் பிரார்த்தித்து நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் ஆலய பரிபாலன சபையி னரின் அனுசரணையுடன் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (கார்த்திகை மாத முதலாம் திகதி முதல் டிசம்பர் 16 ஆம் திகதி வரை தினமும் காலை 7 மணிக்கு நடை பெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து எட் டாந்திருமுறை திருவாசகம், திருக்கோவை யார் முற்றோதல் நிகழ்வை நடாத்தி வரு கின்றனர். அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ண மூர்த்தி கேட்டுக் கொள்கின்றார். ஓ

## யாழ். மத்திய கல்லூரியின் வர்த்தக தினமும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் நடத்தும் வர்த்தக தினமும் மத்திய வணிகம் - 7 சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் எஸ்.ஏ. யோசுவா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை பேராசி ரியர் மா. சின்னத்தம்பி கலந்து சிறப்பிக்க வுள்ளதுடன் சஞ்சிகை அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ. சந்திரசேகரம் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து துறைசார் ஓய்வு நிலை ஆசி ரியர் மற்றும் வர்த்தகத் துறை சாதனையா ளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் பட்டி மன்றமும் நடைபெறவுள்ளது. (ஓ-9)

## சோம வார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ண காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை முதல் ஒவ்வொரு கார்த்திகை மாத திங்கட்கிழமை களிலும் பிற்பகல் 3.30 மணிக்கு சோமவார உற்சவம் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கும்ப பூஜையுடன் உற்சவம் ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. ஓ



பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களிடையே வாசிப்புப் பழக் கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 120 மாணவர்களுக்கு பரு. சாரதா சேவாச்சிர மத்தால் நூல்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 7 ஆம் ஆண்டு மாண வர்களிடம் பரு. சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கேள்விகள் கேட் பதையும், அருகில் பாடசாலை ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுப் பகுதிக்கான மத்தியஸ்த சபை ஆரம் பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இச் சபையின் அமர்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப் பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமானது.

இச் சபை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை யும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 1.00 மணிவரை நடைபெறும் என சபையின் தவிசாளர் இ. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

பிணக்குகள் தொடர்பான முறைப்பாடு கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் முற்பகல் 12 மணிவரை கோப் பாய் கிறிஸ்தவ கல்லூரியில் சபையின் தவி சாளரினால் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப் படும்.

விசாரணைகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 9 மணிமுதல் நண் பகல் 1 மணிவரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-134)

## நடமாடும் இலவச சட்ட சேவை

(யாழ்ப்பாணம்)

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப் பினரால் (CHA) கோப்பாய் பிரதேச செயலா ளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும், கடந்த மற்றும் அண்மைக் காலங்களில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நடமாடும் இலவச சட்ட சேவையும் ஆவணங்களை பதிவு செய் தலும் நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இச்சேவையில் கலந்து பயன்பெறுமாறு அப்பிரதேச மக்களை அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். ஓ

## இராசி பலன்

22.11.2009
(கார்த்திகை 06, ஞாயிற்றுக்கிழமை)
பஞ்சமி காலை 7.37 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 4.22 மணிவரை
இராகுகாலம் 4.40 - 6.10 மணிவரை
சுபநேரம் 9.10 - 10.40 மணிவரை
சஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | தூரதேசச் செய்தி, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| இடபம் | எதிர்பாராத செலவு, அஜீரணக் கோளாறு, உறவினர் சந்திப்பு, கட்டுப்பாடு. |
| மிதுனம் | அபகீர்த்தி, காரியதாமதம், தன விரயம், பெரியோர் உதவி. |
| கடகம் | மனோதைரியம், கீர்த்தி, தெய்வ சிந்தை, குடும்ப மகிழ்ச்சி. |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், பாராட்டு, மனமகிழ்ச்சி. |
| கன்னி | அஜீரணக்கோளாறு, காரிய இடையூறு, சகோதரர் உதவி, தனவிரயம். |
| துலாம் | ரோக பயம், தாய்வழி உறவு, சுபகாரியம், கௌரவக்குறைவு. |
| விருச்சிகம் | நற்கீர்த்தி, வாகன சுகம், முயற்சி பலிதம், உறவினர் உதவி. |
| தனுசு | உணர்ச்சி வசப்படல், போசன சுகக் குறைவு, வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மகரம் | மாதர் நட்பு, வெகுமானம், தொழில் சிந்தை, போசன சுகம். |
| கும்பம் | காரிய அலைச்சல், சுபசெலவு, பிறருக்கு உதவுதல், உறவினர் சந்திப்பு. |
| மீனம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

## புத்தகச் செய்தி

"ஏன் சேர்? இது என்ன வீடா? நூலகமா?"

"ஏன் அப்படிக் கேட்கிறீங்கள்?"

"எந்தப் பக்கம் பார்த்தாலும் புத்தகம் அடுக்கி வைத்தி ருக்கிறீர்களே... அதனால் தான் கேட்டேன்"

"எனக்கு வயிற்றுப் பசியை விட அறிவுப் பசி அதிகம். சோறு வேண்டாம். புத்தகம் இருந்தால் போதும். புத்தகத்தின் பெறுமதி என்னவென்று எனக்குத்தான் தெரியும்."

"உங்களைப் போலவே ரஷ்யாவிலும் அதனுடைய பெறு மதி தெரிந்தவர்கள் சிலர் உண்டு.

மொஸ்கோ பல்கலைக்கழக நூலகத்தில் மூன்றுகோடி பெறுமதியான புத்தகங்கள் திருட்டுப்போய் விட்டதாம். இரவு வேளையில் நூலகத்திற்குள் நுழைந்த திருடர்கள் ஐவர் அங்கிருந்த பெண் ஊழியரைக் கட்டிப் போட்டுவிட்டு புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய் விட்டார்களாம். இதில் ஒருவரை மட்டும் கைது செய்துள்ளார்களாம்."

"அந்த நாட்டில் புத்தகங்களைத் திருடுகிறார்கள். நம் நாட்டில் வேறுமாதிரி சொல்கிறார்கள்"

'எப்படி?'

"இரவலாகக் கொடுங்க என்று வாங்கிக் கொண்டு போவார் கள். பின் திருப்பிக் கொடுப்பதேயில்லை. அதனால் நான் எல்லோருக்கும் ஓர் அறிவுரை சொல்வதுண்டு."

"சொல்லுங்க"

"எப்பொழுதும் புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். அது திரும்பாது"

"உங்களிடம் இவ்வளவு புத்தகங்கள் இருப்பதற்கு அது தான் காரணமா?"

"ஆமாம். இவ்வளவும் நான் இரவலாக வாங்கியது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 80 | 60 |
| லீக்ஸ் | 140 | 150 | 140 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 90 | 100 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | -- | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

# கார்த்திகை மாதப் பலன்கள்



## கும்பம்

(அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வரை)

**நாடி வருபவர்களின் நல்ல யோசனைகளையும், ஆறுதல்களையும் வழங்கும் கும்ப ராசி நேயர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருப்பதோடு, தன லாபாதியான குரு நீச்சம் பெற்றும் அல்லவா? இருக்கிறார். எனவே, தொட்ட காரியங்களில் வெற்றி பெற வேண்டுமானால், தொடர்ந்து வரும் தொல்லைகள் அகல வேண்டுமானால் வழிபாட்டில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

வரவைக் காட்டிலும் செலவு கூடும் இந்த மாதத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். குடும்பச் செலவுகள் கூடிப்போய் விட்டதே என்று கவலைப்படுவீர்கள். உடல் நிலையிலும் ஒன்று மாற்றி ஒன்று வந்து தொல்லை தந்து கொண்டே இருக்கலாம்.

எனவே, நோய்க்கான அறிகுறி தெரியும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. ஆடம்பரச் செலவுகளை குறைத்துக்கொண்டு, இதுவரை சேமித்த சேமிப்புகள் கரையாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

குடும்பத்தினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலமும், கூடுதல் விழிப்புணர்ச்சி செலுத்துவதன் மூலமும் காரியங்களில் வெற்றியை வரவழைத்துக் கொள்ள இயலும். இம்மாதக் கடைசியில் குரு உங்கள் ராசியில் ஜென்ம குருவாக சஞ்சரிக்கப் போவதால் இனம் புரியாத கவலைகள் மேலோங்கலாம். எனவே, குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே நடைபெறும் குரு ஹோமங்களில் கலந்து கொண்டு, அன்னதான வைபங்களிலும் ஈடுபாடு செலுத்தினால், பொருளாதார நிலையும் உயரும். பொன்னான எதிர்காலம் அமைவதற்கான வழியும் பிறக்கும்.

நவம்பர் 27-ஆந் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களை விற்று, புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஈடுபாடு செலுத்துவீர்கள். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி வெற்றிகரமாக முடியும். நாடு மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். பொறுப்புகள் அதிகரிக்கும். புண்ணிய காரியங்களுக்காக ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ்வீர்கள்.

நவம்பர் 28 ஆந் திகதி விருச்சிக ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பெற்றோர் இப்பொழுது விரும்பி வந்து சேரலாம்.

நீங்கள் கேட்ட தொகையைக் கொடுத்து உங்கள் தொழிலுக்கு உறுதுணை புரிய முன்வருவர். அவர்களின் உடல் நலத் தில் அதிக கவனம் செலுத்துவீர்கள். பங்காளிப் பகை மாறும்.

ஜென்ம ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அலைச்சல் அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி அலைய வேண்டிய சூழ்நிலை உருவாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றவும் கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகவும், குரு வழிபாட்டை முறையாக செய்வது நல்லது..ஓராண்டு குருப்பெயர்ச்சியால் நற்பலன் கிடைக்க ஒப்பற்ற குருவை வரும் முன்னதாகவே வரவேற்றுக் கொண்டாடுவது நல்லது. குலதெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுங்கள். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

இம்மாதம் நன்மைகளை அதிகம் வரவழைத்துக் கொள்ள தென்முகக் கடவுளை தரிசிப்பது நல்லது. சிவாலய வழிபாடு சிறப்பை வழங்கும்.



## மீனம்

(பூரட்டாதி 4 பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)

**சுறுசுறுப்போடு செயல்பட்டு சுற்றியிருப்பவர்களை வியக்க வைக்கும் மீன ராசி நேயர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சப்தம ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால், சற்று யோசித்து எதையும் செய்தால் வெற்றி காணலாம். ஆரோக்கியத்தில் சிறு அச்சுறுத்தல்கள் ஏற்படும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் அலைச்சல்கள் அதிகரிக்குமே தவிர ஆதாயம் குறைவாகவே இருக்கும்.

நாலில் கேதுவும், ஏழில் சனியும் இருப்பது நல்லதல்ல. வாழ்வில் வசந்த காலம் கசந்த காலமாக மாறாமல் இருக்க வழிபாடுகளை நீங்கள் அதிகம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வதும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதும் உங்கள் சங்கடங்களை அகற்றும்.

இம்மாதக் கடைசியில் விரயஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கப்போகிறார். எனவே, குடும்பச் செலவுகள் கூடும். அதிகரிக்கும் விரயத்திற்கு ஏற்ற அளவிற்கு வரவைப் பெருக்கிக் கொள்ள குருப்பெயர்ச்சிக்கு முன்ன தாகவே நடைபெறும் குரு வழிபாடுகளிலும், குரு ஹோமங்களிலும் கலந்து கொண்டு குருவின் அருளுக்கு பாத்திரமாவது நல்லது.

நவம்பர் 27-ஆந் திகதி தனுசு ராசியில் ராகுவுடன் புதன் இணைகிறார். இதன் விளைவாக, தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள். எதிரிகள் விலகுவர். இல்லம் தேடி வரும் நல்ல வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளும்பொழுது, சுய ஜாதகத்தையும் ஒரு முறை பார்த்துக்கொள்ளுங் கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கூடுதல் கவனம் தேவை. விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம். ஊர் மாற்றங்களும் ஒரு சிலருக்கு ஏற்படலாம். எதிர்பாராத சந்திப்புகளால் ஏற்படும் புதியவர்களை நம்பி புது முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் ராசிக்கு 3, 8 க்கு அதிபதியான சுக்கிரன் நவம்பர் 28-ஆந் திகதி விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். அதே நேரத்தில் அவர்களுக்கு தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட நீங்களும் கை கொடுத்து உதவுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

### சிவல்புரி சிங்காரம்

இம்மாதக் கடைசியில் கும்ப ராசியில் உங்களது ராசி நாதன் குரு சஞ்சரிக்கப் போகிறார். விரயஸ்தானம் மற்றும் பயண ஸ்தானத்தில் ராசிநாதன் உலா வரும்போது பயணங்களும் அதிகரிக்கும்.விரயங்களும் அதிகரிக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி பெறவும், தொடர்ந்து நற்பலன்கள் கிடைக்கவும், குரு ப்ரீதி செய்வது நல்லது. சான்றோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் இக் காலம் ஒரு பொற்காலமாகும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கலாம். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழலாம். இடமாற்றம், ஊர் மாற்றங்கள் வரும் பொழுது, தெசா புத்தி பலம் பெற்றால் ஏற்றுக் கொள்ளலாம்.

இம்மாதம் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமைய குரு தெட்சிணாமூர்த்தி அருள் வழங்கும் ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது. குரு பார்வையால் கோடி நன்மை கிடைக்கும். (முற்றும்)

# மிளகாய்த் தூளில் கலப்படம் செய்து சந்தைப்படுத்திய நிறுவனத்திற்கு தண்டம்

(கொழும்பு)

தரக்குறைவான மிளகாய்த்தூளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்திய நிறுவனம் ஒன்றுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் குறித்த நிறுவனத்துக்கு அனுராதபுரம் நீதிமன்ற நீதிபதியும், மாவட்ட மேலதிக நீதிவானுமாகிய தர்ஷிகா விமலசிறி முப்பதாயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கலன்பிந்துனுவெவ, மெகொட பகுதியிலமைந்திருக்கும் "சௌமிய" உற்பத்தி நிறுவனத்துக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது.

மிளகாய் தூளுக்குள் கோதுமை மாவைக் கலந்து சந்தைப்படுத்தியதாக நிறுவனத்தின் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. கலன்பிந்துனுவை பகுதிக்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி என். ஆர். பெரேராவின் ஆலோசனைக்கேற்ப யகல்ல பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.எம். வர்ணசூரிய உட்பட்ட பொதுச் சுகாதார பரிசோதர் குழு குறித்த நிறுவனத்தின் உற்பத்திகளைப் பரிசோதித்துள்ளதுடன் நிறுவனத்துக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்தது. (ஓ-6)

## ஹஜ் விடுமுறைகாலம் முடியும் வரை

# சவூதியில் பாலத்தின் கீழ் வாழும் இலங்கையருக்கு உதவ முடியாதுள்ளது

## சவூதி இலங்கைத்தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு திரும்புவதற்கு உதவுமாறு கோரி சவூதி அரேபியாவில் பாலம் ஒன்றின் கீழ் வாழ்ந்து வரும் இலங்கை பணியாளர்கள் தொடர்பில் தற்போதைக்கு தம்மால் எவ்வித நடவடிக்கைகளையும் கொள்ள முடியாதிருப்பதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அந்நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதனாலேயே சவுதி அரேபியாவில் உள்ள கந்தரா பாலத்தின் கீழ் தங்கியுள்ள 200 இலங்கையருக்கும் உதவ முடியாதுள்ளதாக இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

ஹஜ் விடுமுறைகாலம் முடிவடைந்ததன் பின்னர் அதாவது டிசம்பர் 02 ஆம் திகதிக்குப் பின்னரே இவர்களது கோரிக்கை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் தாய் நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளில் உதவுமாறு 200 இலங்கையரும் பாலத்தின் கீழ் தங்கியிருப்பது தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கையில் இருந்து உயரதிகாரிகள் குழுவொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜித்தாவுக்கு சென்றிருந்தது.

இந்நிலையிலேயே சவுதியில் உள்ள இலங்கை தூதரகம் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# கோத்தபாயாவையும் பொன்சேகாவையும் யுத்த குற்றவாளிகளாக்கும் பின்னணியில் ஞானக்கோன்

## சிங்கள ஊடகம் தகவல்

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை யுத்தக் குற்றவாளிகளாக்கும் சதித் திட்டத்தின் பின்னணியில் ஜயந்த ஞானக்கோன் என்பவர் இருப்பதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளரான ஜயந்த ஞானக்கோன் என்பவரே சரத் பொன்சேகா. மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் விமானியான ஜயந்த ஞானக்கோன் அமெரிக்காவின் முன்னாள் பிரதி சட்டமா அதிபர் புரூஸ் பெய்னின் உதவியுடன் இந்த சதி - முயற்சியை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராணுவத்தினர் தமிழ் மக்களை படுகொலை செய்ததாக உலகிற்கு வெளிக்காட்டும் நோக்கில் அமெரிக்காவில் ஓர் அமைப்பையும் குறித்த நபர் உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பணிகளுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் ஜயந்த ஞானக்கோனுக்கு பணம் வழங்கியுள்ளனர் என்றும் அந்த சிங்கள ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# அரச ஊழியர்களின் இடமாற்றங்கள்

## இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்த ஆலோசனை

அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரிவோரின் இடமாற்றங்கள் அனைத்தையும் இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக் குமாறு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரியும் அதிகாரிகளுக்கு விடய தானங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் தொடர்ந்து 5 வருடங்கள் பணி புரியும் அரச ஊழியர்களை இடமாற்றம் செய்யும் நடைமுறை தொடர்ந்து இடம் பெற்றுள்ளது. எனினும் பல்வேறு காரணங் களுக்காக கடந்த ஆண்டுகளில் இவற்றில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய இடமாற்றங்களை இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத் துவதென பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளதுடன் அமைச்சர் சரத் அமுனுகம இது தொடர்பில் உரிய வழிகாட்டல்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். இதற்கமைய டிசம்பர் மாதத்தில் இடமாற்றங்கள் நிகழ்வதுடன் விடயதானங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை ஜனவரி மாதத்தில் இடம்பெறும்.

அரசாங்கத்தின் சேவையை மக்கள் இலகுவாக பெற்றுக்கொள்ளும் வகையில் பல்வேறு திட்டங்கள் பொது நிர்வாக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அம்சமாகவே மேற்படி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# மாணவர்களுக்கான இலவச சீருடை மூன்றாம் தவணை முடிவுக்கு முன்னர்

## கல்வியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்காக அரசாங்கம் 126 கோடிரூபாவை ஒதுக்கியுள்ளது.

இச்சீருடைத்துணிகளை இவ்வருடம் 3ஆம் தவணை முடிவுக்கு முன்னர் வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வருடம் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணி பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படமாட்டாது என்றுதெரிய வருகிறது.

10.47 மில்லியன் மீற்றர் துணி உள்நாட்டு வர்த்தகர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இத்துணி 65 இலட்சம் பொதிகளில் அடைக்கப்பட்டு வடக்கு, கிழக்கு உட்பட 94 வலயக்கல்வி அலுவலகங்களினூடாக விநியோகிக்கப்படவுள்ளது.

இதேவேளை இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக அரசாங்கம் வருடாந்தம் பெருந்தொகைப் பணத்தை செலவிடுவதால் பாடசாலை நூல்களை உச்சமாகப் பயன்படுத்துமாறு கல்வியமைச்சு கல்வி அதிகாரிகளை கேட்டுள்ளது.

பாடநூல்களை மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் இச்செலவைக்குறைக்குமாறு கோரும் சுற்றுநிருபம் கல்வியமைச்சினால் கல்வி அதிகாரிகளுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

3ஆம் தவணையின் கடைசிநாளில் மாணவர்களை அழைத்து கூட்டம் ஒன்றை நடத்துமாறு அந்த சுற்றுநிருபத்தில் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படவுள்ளது. புத்தக விநியோக நாள் என்று இத்தினத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. பாடநூல்களை கவனமாகவும் துப்புரவாகவும் பயன்படுத்தும் மாணவர்களுக்கு கல்வி அமைச்சு பரிசில்களையும் வழங்குகின்றது. அத்துடன் பாட நூல்களை மீளப் பயன்படுத்தியதன் மூலம் கல்வியமைச்சு கடந்த வருடத்தில் 4510 இலட்சம் ரூபாவையும்இந்த வருடத்தில் 8560 இலட்சம் ரூபாவையும் சேமித்துள்ளது.

2010 ஆம்ஆண்டில் நூறுகோடி ரூபாவை சேமிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

# இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி அனைத்து தரப்பினரையும் பாதிக்கும்

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்படக்கூடிய பொருளாதார வீழ்ச்சி அனைவரது வாழ்க்கையையும் மிக மோசமாகப் பாதிக்கும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலைமை காரணமாக இலங்கைக்கு பொருளாதார உதவி வழங்குவதென இந்த நிதியம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைப் பணிப்பாளர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில் எந்தவொரு நாட்டிலும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் போது மிகவும் பாதிப்படையும் நிலையில் உள்ளவர்களே மேலும் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்ததாக நிதியத்தின் வெளியுறவுத் திணைக்களப் பணிப்பாளர் கரோலின் அற்கின்சன் ஊடகவியலாளர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

முகாமைப் பணிப்பாளரின் நவம்பர் 5 ஆம் திகதி அறிக்கையில் ''மனித உரிமைகள் நிலைமை பற்றிய ஒருவரது அபிப்பிராயம் எப்படி இருந்தாலும் என்று குறிப்பிடப்பட்டதன் அர்த்தம் சர்வதேச நாணய நிதியம் மனித உரிமை பேணலை கவனத்தில் எடுப்பதில்லை என்பதா? என்று அற்கின்சனிடம் கேட்கப்பட்டது. இந்தக் கூற்று மற்றவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறதா? என்பது மற்றொரு கேள்வியாகும்.

முகாமைப் பணிப்பாளர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கடிதத்திற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

மேலும் மனித உரிமைகள் பேணலின் முக்கியத்துவம் பற்றிய முகாமைப் பணிப்பாளரின் உணர்வையே அவரது கடிதத்தின் உள்ளடக்கம் நேரடியாக எடுத்துக்காட்டுகிறது என்றும் அற்கின்சன் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் தற்போது சரியோ பிழையோ எது நடந்தாலும் ஒரு பொருளாதார வீழ்ச்சி அனைவரின் வாழ்க்கையையுமே பாதிக்கும் என்பதே உண்மையாகும் என்று அற்கின்சன் ஊடகவியலாளர்களுக்கு பதிலளித்தார். (ஓ-6)

# ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிக்கைக்கு 750 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு

## ஜே.வி.பி. பா.உ. லால் காந்த

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு 5000 ரூபா சம்பள உயர்வை வழங்குமாறு தொழிற்சங்கங்கள் விடுத்து வரும் கோரிக்கைக்கு 750 ரூபாவினால் அரசாங்கம் பதிலளித்துள்ளதென ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களை இலக்காக வைத்தே இந்த 750 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கத்தின் இயலாமை வெளிப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

5000 ரூபா கோரிக்கைக்கு 750 ரூபா வாழ்க்கைச் செலவு படி எந்த வகையிலும் திருப்தி அடையக்கூடிய தீர்வாக அமையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

5000 ரூபா சம்பள உயர்வினைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்காலங்களில் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


# DISTRICT SECRETARIAT, JAFFNA

# INVITATION FOR BIDS

## STRENGTHENING CIVIL ADMINISTRATION PROGRAMME

## PROPOSED CIRCUIT BUNGALOW FOR PUBLIC ADMINISTRATION AT NORTHERN PROVINCE JAFFNA.

1. **The Chairman, District Procurement Committee**, on behalf of the **District Secretariat, Jaffna** . now invites sealed bids from eligible and qualified bidders for **"Proposed Circuit Bungalow for Public Administration at Northern Province Jaffna."** As described below and estimated to cost **Rs. 7.9 Mn**.
The Construction period is **120 days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M6/C7 or above with the Institute for Construction Training and Development (ICTAD).

4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Central), Department of Buildings, Jaffna**, and inspect the Bidding Document at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs.**
Contact numbers are: Phone: 021 -222 2781, Facsimile : 021 – 222 2781.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Jaffna. from 23rd November 2009 until 03rd December 2009 from **9.00hrs to 15.00hrs** upon payment of a non – refundable fee of **Rupees One Thousand (Rs.1000/-) only**.

6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, District Procurement Committee District Secretariat, Jaffna**. to reach at or before **10.00 hrs on 7th December 2009** Bids will be opened soon after closing at the **District Secretariat, Jaffna** in presence of the Bidders' representatives who choose to attend.

7. Bids shall be valid for a period of **77 Days** from the date fixed for closing of Bids or any extend period.

8. All Bids Shall be accompanied by a Bid security for an amount of **Rupees One Hundred and Fifty Nine Thousand (159,000.00)** which should be valid up to **20th March 2010.**

**K. Ganesh**
**Government Agent,**
**District Secretariat,**
**Jaffna.**

(C-3756)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக்
கல்லூரியின் நிறுவுனரும் சைவப் பெருவள்ளலாருமான
சேர்.பொன்.இராமநாதன் அவர்களின்

# நினைவு தினவிழா

நாளை திங்கட்கிழமை 23.11.2009

அன்புடையீர்!

நிகழும் விரோதி வருடம் கார்த்திகை மாதம் 07 ஆம் நாள் (23.11.2009) திருவோண [illegible] திங்கட்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அத்திவாரமிட்டவரான சேர். பொன். இராமநாதன் அவர்களின் குருபூசைத் தினமாகும். இதனையொட்டி அன்று காலை 7.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ [illegible] பெருமானுக்கு அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகமும், விஷேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்று காலை 9.00 மணிக்குப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள சேர்.பொன். இராமநாதன் அவர்களின் சிலைக்கும் பல்கலைக்கழக சபாமண்டபத்திலுள்ள (Board Room) அவரின் உருவப் படத்திற்கும், துணைவேந்தர் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நிகழ்ச்சி நிரல்

காலம்: 23.11.2009 திங்கட்கிழமை
8.30க்கு ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் பூசை வழிபாடு. 9.30க்கு கருத்தரங்கு
இடம்: புதிய நூலகக் கேட்போர் கூடம்

ஆய்வுரை வழங்குபவர்கள்


பேராசிரியர் [illegible]. சத்தியசீலன் அவர்கள் பீடாதிபதி,
(உயர்பட்டப் பின்படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
விடயம்: சேர்.பொன். இராமநாதனின் அரசியல் சமூகப் பங்களிப்புகள்
பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன் அவர்கள்
([illegible], யாழ். பல்கலைக்கழகம்)
விடயம்: ஈழத்து சைவ சித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர். பொன். இராமநாதன்,
2.30க்கு கலை நிகழ்ச்சிகள்:
பண்ணும் பரதமும் எனும் கலை நிகழ்ச்சியை இராமநாதன் நுண்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து வழங்குவார்கள்
இடம்: இராமநாதன் நுண்கலைக்கழகம் நூலகக் கேட்போர் கூடம்-மருதனார்மடம்.

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 13.11.2009 (8960)

பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர்சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை,
இந்து மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# தென்னிலங்கையில் கூர்மை அடைந்து வரும் அரசியல் முரண்பாடுகளும் தமிழ் மக்களின் பங்களிப்பும்



இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவுக்கு வருவதைத் தொடர்ந்து தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன. இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி இருப்பிடத்தை நிரப்பி விட வேண்டும் என ராஜபக்ஷ சகோதரர்கள் தலையால் நடக்கின்றனர்.

எதிர்க்கட்சிகளும் உதிரிக்கட்சிகளும் கூட்டணி தொடர்பாக பேசுகின்றன. அரசின் இந்த ஆரவாரத்திற்குள் ஈழத்தமிழ் மக்களின் அவலங்கள் மறைந்து போகும் சந்தர்ப்பங்களும் எழுந்துள்ளன. எதிர்வரும் தேர்தலில் தேவைப்படும் வாக்குகளுக்காகவும் அனைத்துலகத்தில் இருந்து பெறப்படும் நிதி உதவிகள் மூலம் தென்னிலங்கை மக்களுக்கு தேர்தல் நிவாரணங்களை வழங்குவதற்காகவும் இலங்கை அரசு தனது கட்டுப்பாடுகளில் சிலவற்றை தளர்த்தியுள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு தேர்தல் நெருங்கும் சமயத்தில் மேற்குலகம் மேற்கொண்ட பொருளாதார அழுத்த எச்சரிக்கைகளும் காரணம். தென்னிலங்கை மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும் போது அவர்கள் போரின் வெற்றி செய்திகளை மறந்துவிடுவார்கள் என அரசு அஞ்சுகின்றது.

மேலும் தமிழ் மக்களின் வாக்கு வங்கியை அபகரிப்பது எப்படி என்ற கனவில் சிங்கள அரசின் ஆளும் தரப்பு காய்களை நகர்த்திய போது சரத்பொன்சேகாவின் வடிவத்தில் மேலும் ஒரு பாரிய நெருக்கடி அரசை சூழ்ந்துள்ளது. எதிர்வரும் தேர்தலில் அது பொதுத் தேர்தல் என்றாலும் ஜனாதிபதித் தேர்தல் என்றாலும் தமிழ் மக்கள் மீதான சிங்கள தேசத்தின் வெற்றிச் செய்திகள் தான் முதன்மையான பங்கை வகிக்கப்போகின்றன.

அதற்கு அப்பால் தான் ஏனைய பிரச்சினைகளின் தாக்கங்கள் இருக்கும். எனவே தான் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒரு சமயத்தில் நடத்தும் சிந்தனைகளும் அரசிற்கு உதித்திருந்தன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை தேச விரோத கட்சியாக சித்தரிப்பதன் மூலம் தனது விம்பத்தை உயர்த்தி காண் பிக்க போரின் வெற்றி அரசிற்கு உறுதுணையாக அமைந்து விட்டது.

ஆனால் தற்போது எழுந்துள்ள முக்கிய பிரச்சினை ஜெனரல் சரத் பொன்சேகா தான். தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து பொன்சேகா களத்தில் குதித்தால் போரின் வெற்றியை துருப்புச் சீட்டாக வைத்து அரசு ஆட எண்ணிய ஆட்டம் பாதாளத்திற்குள் தூக்கி வீசப்படலாம்.

ஏனெனில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை மேற்கொண்டவர்கள் என்ற கோணத்தில் சிங்கள தேசம் பார்க்கும் போது பொன்சேகாவுக்கும் மஹிந்தவிற்கும் சம பலம் தான் எட்டும். மேலும் பொன்சேகா சீருடையுடன் களமிறங்கினால் மஹிந்தாவின் சிவப்பு துண்டின் சாயம் மங்கிவிடலாம். தமிழ் மக்களின் வாக்குகள் பொன்சேகாவுக்கு ஆதர வான சிங்கள மக்களின் வாக்குகள் என வாக்குகள் பிரிக்கப்பட்டால் அரசின் நிலை பெரும் கேள்விக்குறியாகி விடும் என்ற அச்சம் அரச தரப்பை ஆட்டம் காண வைத்துள்ளது.

மனித உரிமை மீறல்கள், ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைகள் மற்றும் தாக்குதல்கள், கருத்து சுதந்திரம் மறுக்கப்படுதல், பொருளாதார சீரழிவு, அனைத்துலகத்தின் அன்னியப்படுத்தல்கள் அல்லது அழுத்தங்கள் என்பன அரசிற்கு சாதகமானதாக இல்லை.

எனினும் அரசின் ஒரு பலமாக இருந்தது போர் தொடர்பான வெற்றி செய்தியும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய பேரழிவும் தான்.ஆனால் பொன்சேகாவின் வரவு அதனை சமப்படுத்திவிட்டால் அரசிற்கு வேறு மார்க்கங்கள் இருக்கப் போவதில்லை. இந்த நிலையில் தான் கடந்த மாதத்தின் இறுதிப்பகுதியில் பொன்சேகா அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயமும் அதனால் ஏற்பட்ட இராஜதந்திர மோதல்களும் இடம்பெற்றிருந்தன.

தன்னை அமெரிக்கா விசாரணைகள் செய்ய முற்பட்டதாக பொன்சேகா தரப்பும், பொன்சேகா இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் தொடர்பான தகவல்களை வழங்கும் துரோகியாக மாறிவிட்டார் என அரச தரப்பும் பல நாடகங்களை அரங்கேற்றியிருந்தன.


பொன்சேகாவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படக்கூடாது. அவரிடம் பல தகவல்கள் உள்ளன என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் பற்றீசியாவிடமும், ஊடகவியலாளர்களிடமும் தெரிவித்தது தனக்குத் தானே நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொண்டதற்கு ஒப்பானது என தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்திருந்தது.

ஏனெனில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்கள் பொன்சேகாவிடம் உண்டு என்பதை அரசு ஒப்புக்கொண்டதாகவே அந்த தகவல்கள் அமைந்துள்ளன. இருந்த போதும் அமெரிக்கா பொன் சேகாவை தப்பிக்க விட்டுள்ளது.

பொன்சேகா தப்பிய இந்த தருணத்தில் தான் மேலும் பல ஊகங்கள் எழுந்துள்ளன. அதாவது அமெரிக்காவின் இலக்கு என்ன? என்பது தான் அதன் முக்கிய கேள்வி அமெரிக்காவின் முக்கிய இலக்கு கோத்தபாயவே என தென்னிலங்கை ஊடகங்களில் சில எழுதியுள்ளன.கோத்தபாயவை மடக்குவதற்காகவும், இலங்கை அரசை அச்சுறுத்துவதற்காகவுமே அமெரிக்கா பொன்சேகாவை தப்ப விட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இலங்கை அரசை பொறுத்த வரையில் பொன் சேகாவை அமெரிக்காவில் சிக்கவைப்பதற்கே முயன்றதாக தெரி விக்கப்படுகின்றது. எனவே தான் கடந்த செப்ரெம்பர் மாதம் கோத் தபாய ராஜபக்ஷ நியூயோர்க் சென்ற போது அமெரிக்க அதிகாரிகளினால் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளை அது மறைத்து விட்டதாக தெரிவிக் கப்படுகின்றது.

ஜோன் கென்டி விமான நிலைய அதிகாரிகள் கோத்தபாயவின் பெயரை கணனியில் பதிவு செய்ததும் அது எச்சரிக்கை வாசகத்தை கொடுத்ததாகவும், அதனை தொடர்ந்து அவரை அதிகாரிகள் அறை ஒன்றுக்கு அழைத்துச்சென்று விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோத்தபய மீதான இந்த விசாரணைகள் இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் மூலமே வெளியில் கசிந்திருந்தன. ஏனெனில் அவரும் கோத்தபாய பயணித்த அதே விமானத்தில் பயணத்தை மேற்கொண்டிருந்தார். ஆனால் தற்போது பொன் சேகா திரும்பி வந்தது இலங்கையில் ஆளும் தரப்பிற்கு கடுமையான



நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. பொன்சேகாவை பொறுத்தவரையில் அவர் அரசியலில் இறங்குவது குறித்தோ அல்லது மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து தேர்தலில் நிற்பது குறித்தோ உறுதியான தகவல்கள் எவையும் வெளிவரவில்லை.

ஆனால் ஊகங்கள் அதனை உறுதிப்படுத்துவது போலவே வெளிவந்த வண்ணம் உள்ளனர்.

எனினும் இலங்கை அரசு தேர்தல் வெற்றிக்கான ஏற்பாடுகளை விரைவாக மேற்கொள்ள ஆரம்பித்து விட்டது. மேற்குலகத்துடன் மேற்கொண்டு வந்த கடும் போக்கில் இருந்து நழுவி தற்போது அவர்களின் நிபந்தனைகளுக்கு பணிவது போன்று சில செயற்பாடுகளையாவது நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 இலட்சம் தமிழ் மக்க ளில் ஒரு பகுதியினரை வட பகுதி யில் மீளக் குடியமர்த்தியுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் சில வற்றின் விலைகளையும் குறைத்துள்ளது.சிங்கள மக்களுக்கு பல சலு கைகளையும் வழங்க தயாராகி வருகின்றது. இந்தத் தேர்தல் காலத்து சலுகைகளுக்கு தேவையான நிதியை பெறுவதற்காக மேற்குலகத்தின் அழுத்தங்களுக்கும் பணிந்து



போகத் திட்டமிட்டுள்ளது.

ஆனால் ஒரு நாட்டுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் என்பது அந்த நாட்டின் ஒரு கட்சியின் அரசியல் அபிலாஷைகளுக்கு உதவியாக அமைந்துவிடக்கூடாது என்பது அனைத்துலகத்தின் கொடையாளி நாடுகளின் சட்ட விதிகளில் ஒன்று. எனவே தேர்தல் காலத்தில் அவர்கள் என்ன பங்கை வகிக்கப் போகின்றனர். இலங்கையில் நிதித்தேவைகளை பூர்த்தி செய்வார்களா என்பது எதிர்வரும் மாதங்களில் தெரிந்து விடும்.

சிங்களத் தேசத்தின் தேர்தல் முரண்பாடுகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் கடமை என்ன ? என்பது முக்கியமான கேள்வி.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் அதிகம் அனுகூலமானவை தென்னிலங்கையில் இந்த முரண்பாடுகளை கூர்மையாக்கி தற்போதைய அரசை துரத்தும் நோக்கம் ஒன்றே முதல் பணியாக தமிழ் மக்களின் மனங்களில் புதைந்து கிடக்கும் அவாவாகும்.

அதன் மூலம் தான் மஹிந்த அரசு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட பேரழிவுகளுக்கு நாம் பதில் தர முடியும். தற்போதைய அரசை பெறுத்தவரையில் நிர்வாகத்தில் உள்ளவர்களின் பெயர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ஒரு குழுவாகவே மேற்குலகத்தின் ஆவணங்களில் பதியப்பட்டுள்ளன. எனவே எதிர்வரும்

**வேல்ஸிலிருந்து அருஸ்**

தேர்தலில் அரச தரப்பு தோல்வியைத் தழுவினால் அவர்கள் இலங்கையிலும் இருக்க முடியாது, வெளி நாட்டுக்கும் செல்ல முடியாது. என்ற ஒரு நிலை தான் ஏற்படும் இந்த நிலையை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் எமது பணிகளை தற்போதே ஆரம்பிப்போமாக.




# ருத்ரம்




நட்சத்திரங்கள் :- ஜான்குசெக், அமென்டா பீட், சிவிடெல் எஜியோபர், தாண்டி நியூடன் மற்றும் பலர்.

இயக்கம் :- ரோலன்ட் எமிரிக்.

உலகம் அழிய நேர்ந்தால்.... என்ற இந்த ஒற்றைச் சொல்லை வைத்துக்கொண்டு இன்டிபெண்டன்ஸ் டே, தி டே ஆப்டர் டுமாரோ போன்ற படங்களைத் தந்த ரோலண்ட் எமெரிக்கின் கற்பனையின் இன்னுமொரு படம் இந்த 2012. உலகம் முழுக்க பாக்ஸ் ஆபீஸ் வசூலில் கலக்கிக் கொண்டிருக்கும் இந்தப் படம் தமிழில் ருத்ரம் என்ற பெயரில் வெளியாகியுள்ளது.

கதை இன்றைய 2009 இல் ஆரம்பிக்கிறது. பூகம்பம் மற்றும் சுனாமி மூலம் பூமிக்கு அழிவு நெருங்குவதை விஞ்ஞானிகள் அமெரிக்க அரசுக்கு அறிக்கையாத் தருகிறார்கள். பூமியைக் காக்க உலக நாடுகளில் தடுப்பு நடவடிக்கைகளில் இறங்குகின்றன. பலனில்லை. 2012 இல் உலகின் அழிவு ஆரம்பிக்கிறது.

பெரும் ஆக்ரோஷத்தோடு பூமி வாய்பிளக்க பெரிய பெரிய நகரங்கள் புதையுண்டு போகின்றன. கண்முன்னே பெரும் அவலம் நடக்க என்ன செய்வதென்று தெரியாமல் கைபிசைந்து நின்று அந்த அழிவில் ஐக்கியமாகின்றன. இதற்கிடையில் அமெரிக்காவில் வசிக்கும் ஜான் குசேக் தனது குடும்பத்தினரை காப்பாற்றப் போராடுகிறார். பூமி மேலடுக்கு அதன் பாதாளத்துக்கு இறங்கும் நிலையில் ஜான்குசேக் காரை வேகமாக ஓட்டி குடும்பத்தினரை காப்பாற்றி விமானத்தில் ஏற்றி மயிரிழையில் உயிர் தப்புகிறார்......... என்று போகிறது கதை. நாயகன் குடும்பத்தோடு தப்பிக்கும் காட்சி அச்சு அசல் சினிமாத்தனம் என்றாலும், அந்த காட்சியமைப்பு ரசிகர்களை இருக்கை நுனிக்கு கொண்டு வந்துவிடுகிறது.

எரிமலை தீப்பிடிப்புகள் பூமிக்குள் இருந்து சீறிப் பாய்வது, மலைகள் பிளந்து உருள்வது, வானளாவிய கட்டிடங்கள் சரிந்து மண்ணில் புதைவது, மேம்பாலங்கள் உடைந்து கார்கள் பொம்மைகளாய் வானில் இருந்து விழுவது, பாலம் உடைந்து ரயில் தூக்கி வீசப்படுவது, ஒரு பல மாடி சூப்பர் மார்க்கெட் பாதியாக பிளப்பது, சுனாமிப் பேரலை நிலப்பகுதியை விழுங்குவது, கப்பல்கள் தூக்கி வீசப்பட்டு குடியிருப்புகளில் வந்து விழுவது என நம்மை உறைய வைக்கின்றன காட்சிகள். உலகம் அழியும் காட்சியை உருவாக்கிய விதத்துக்காக இயக்குநருக்கும் அவரது கிராபிக்ஸ் டீமுக்கும் உலகம் முழுவதுமே ஆச்சரியம் கலந்த பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

சினிமா தொழில் நுட்பத்தின் உச்சம் இந்தக் காட்சிகள். ஒரு அழிவைச் சொல்ல இத்தனை செலவும் உழைப்பும் தொழில் நுட்பமும் தேவையா என்றெல்லாம் விமர்சனங்கள் வரக்கூடும்........ இந்தப் படத்துக்காக செலவான தொகை ரூ. 1,400 கோடி என்கிறார்கள். படம் கொஞ்சம் நீளமே. ஆனால், ஆச்சரியத்துடனும் அதிர்ச்சியுடனும் இரண்டரை மணி நேரமும் கழிகிறது. அசத்தல் கிராபிக்ஸ் காட்சிகளுக்காக ஒரு முறை பார்க்கலாம்.

# அதே நேரம் அதே இடம்






நட்சத்திரங்கள்: ஜெய், விஜயலட்சுமி, நிழல்கள்ரவி மற்றும்பலர்

இயக்கம் -பிரபு.எம்.

நிழல்கள் ரவியின் மகன் ஜெய். படித்துவிட்டு வேலையின்றி சுற்றுகிறார். அவருக்கும் விஜயலட்சுமிக்கும் காதல் மலர்கிறது. தந்தைக்கு இவ் விஷயம் தெரியவர வேலை செய்து சம்பாதித்து விட்டு திருமணம் செய்து கொள் என்றார். அவரின் அறிவுரைப்படி அவுஸ்திரேலியாவில் கிடைத்த வேலையில் சேரப்போகிறார். ஒரு வருடம் பிரிந்திருப்பது என்று காதலர்கள் முடிவு செய்கின்றனர்.

கைநிறைய சம்பாதித்து நாடு திரும்பும் போது ஜெய்க்கு அதிர்ச்சி. விஜயலட்சுமி பணக்கார மாப்பிள்ளை ராகுலை மணந்து குடித்தனம் நடத்துகிறார். விஜயலட்சுமியிடம் ஆவேசப்படுகிறார். ஆனால் அவரோ பணம் தான் முக்கியம் என்று சொல்லி ஜெய்யை உதாசீனம் செய்கிறார். உன்னை ஏமாற்றிய அவளைப் பழிவாங்கு என்று நண்பன் வெறியேற்றுகிறான். அதன்படி விஜயலட்சுமிக்கு தொல்லை கொடுக்கிறார் ஜெய். காதல் கிரைம் கதையை இளமையாகவும், விறுவிறுப்பாகவும் நகர்த்தியுள்ளார் இயக்குநர் பிரபு.எம்.

ஜெய் - விஜயலட்சுமி காதல் வயப்படும் காட்சிகள் கலகலப்பு. தோல்வியில் ஜெய் சோகம் காட்டுகிறார். விஜயலட்சுமி கணவனே ஜெய்க்கு நண்பனாக இருப்பதும், விஜயலட்சுமியை பழிவாங்க அவன் தூண்டுவதும் திருப்பங்கள். காதலித்து ஏமாற்றும் பெண்கள் மேல் வெறுப்புக் காட்டும் ராகுல் தனது மனைவியின் கடந்த கால வாழ்க்கை தெரிந்தால் என்ன செய்வாரோ என்று பதட்டப்பட வைக்கிறார். விஜயலட்சுமியை ஜெய் பழிதீர்க்கும் க்ளைமாக்ஸ் பரபரக்க வைக்கிறது. விஜயலட்சுமி காதலும், கவர்ச்சியும் காட்டுகிறார். பவன் சேகர் ஒளிப்பதிவு கைகொடுக்கிறது. பிரேம்ஜி அமரனின் இசையில் பாடல்கள் இனிமை. திரைக்கதையை இன்னும் அழுத்தமாக்கியிருக்கலாம். பழி தீர்த்தல் காதல் புனிதத்தை அடிபட செய்கிறது.

# என் வாழ்க்கையில் தோல்விதான் அதிகம் ஐஸ்வர்யாராய்



ஐஸ்வர்யாராய் தனது திருமணம் மற்றும் சினிமா வாழ்க்கை பற்றி மலரும் நினைவுகளை நிருபர்களிடம் பகிர்ந்தார். அவர் கூறியதாவது, வாழ்க்கையில் நான் ரொம்பக் கஷ்டங்களை சந்தித்துள்ளேன். தோல்விகளை அதிகம் பார்த்தேன். பள்ளியில் படித்தபோது அமைதியான பெண். கால்கூட தெரியாத அளவுதான் ஆடை உடுத்துவேன். 10 ஆவது வகுப்பு நான் படித்போது என் பின்னால் நிறைய மாணவர்கள் சுற்றினர். நான் அவர்களை திரும்பிப் பார்ப்பதே இல்லை. அதனால் எந்தப் பிரச்சினையும் வரவில்லை.

பள்ளியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற என்னைப்படம் எடுத்து பத்திரிகையில் போட்டனர். அதன்பிறகு என் வாழ்வே மாறியது. மொடலிங்கில் நுழைந்தேன். பெரிய இக்குநர்கள் எல்லாம் நடிக்க அழைத்தார்கள். ஆனால் உலக அழகிப்போட்டியில் பங்கேற்பதில் தான் என் கவனமெல்லாம் இருந்தது. 1994 இல் தென் ஆபிரிக்காவில் நடந்த அழகிப்போட்டியில் நீதான் உலக அழகி என்று அறிவித்தபோது எனக்குள் வீறிட்ட சந்தோஷத்தை சொல்ல வார்த்தை இல்லை. அதைவிட அதிகம் சந்தோஷத்தை அபிஷேக் பச்சனைத் திருமணம் செய்த தன் மூலம் அடைந்தேன். சுவிட்சர்லாந்தில் இருவரும் படப்பிடிப்புக்கு சென்றிருந்தோம். அப்போது அபிஷேக்பச்சன் தான் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக முதலில் சொன்னார். அவரது நகைச்சுவை உணர்வு ரொம்பப் பிடிக்கும். மகிழ்ச்சியாக அவருடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். இவ்வாறு ஐஸ்வர்யாராய் கூறினார்.


# ராஜசேகர ரெட்டி வேடத்தில் ஷாம்

ஹெலிகொப்டர் விபத்தில் மரணமடைந்த ஆந்திர முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டியின் வேடத்தில் நடிக்கப் போகிறார் நடிகர் ஷாம்.

தெலுங்கில் ரவி தேஜாவின், கிக் படத்தில் வில்லனாக நடித்த ஷாம், இப்போது ஆந்திராவின் இளம் முன்னணி நடிகர்கள் லிஸ்ட்டில் இணைந்துவிட்டார். எக்கச்சக்க வாய்ப்புக்கள் ஷாமைத் தேடி வரத் தொடங்கிவிட்டன.

கிக் படத்தை தொடர்ந்து அவர் ஒப்புக்கொண்டிருப்பது பூரி ஜகன்நாத்தின் நிஜ அரசியல்வாதி கதையம்சம் கொண்ட படத்தைத்தான். ஏற்கனவே போக்கிரி உள்ளிட்ட பல ஹிட் படங்களை இயக்கியிருக்கும் ஜகன்நாத், தற்போது ஷாமை வைத்து இயக்கவிருக்கும் இப்படத்திற்கு இன்னமும் பெயரிடப்படவில்லை.


ராஜசேகர ரெட்டியின் இளம் வயது வாழ்க்கை, அரசியல், வாழ்க்கை என அனைத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் படம் உருவாகவிருக்கிறதாம்.



# ஜெயம்ரவியை இயக்கும் பிரபுதேவா

மகிழ்ச்சியில் இருக்கிறார் பிரபுதேவா. நயன்தாரா பிரச்சினையை மீடியாக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஓரம் கட்டிவிட்டது ஒருகாரணம் என்றாலும், இன்னொரு காரணம் அவருடைய இந்திப்படம் ஹிட்டானதுதான்.

இதைத்தொடர்ந்து இந்திப்படங்களை இயக்குவதற்கான வாய்ப்புகள் பிரபுதேவாவுக்கு தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் அந்த இந்தி வாய்ப்புக்களை தூரத் தள்ளிவிட்டு, தமிழ்ப்படத்தை இயக்குகி றார் பிரபுதேவா.




இந்தப் படத்தில் ஹீரோவாக நடிப்பவர் ஜெயம்ரவி. இந்தப் படத்திற்கு ஹரிஸ் ஜெயராஜ் இசை அமைக் கிறார்.

பாரிஸில் வாழும் இரண்டு தமிழ் குடும்பங்களின் வாரிசுகள் காதலிக்கிறார்கள், ஒரு கட்டத்தில் இவர்கள் காதல் தோற்றுப் போக, அதற்கும் பிறகு இருவரும் என்னவாகிறர்கள் என்பது தான் கதையாம்.

ஜெயம்ரவிக்கு ஜோடியாக இந்தப் படத்தில் ஸ்ருதிஹாசன் நடிப்பார் என்று தெரிகிறது. ஜெயம்ரவி தில்லாலங்கடியை முடித்த கையோடு இந்தப் படத்தில் நடிக்கவுள்ளார்.

# மீண்டும் சுவரில்லாத சித்திரங்கள் பாக்யராஜ் இயக்கத்தில் சாந்தனு

"சித்து பிளஸ் 2 பெஸ்ட்ர்ட் அட்டம்ப்ட்" படத்தினை முடித்த கையோடு நடிகர் சாந்தனு அடுத்த படமான ஆயிரம் விளக்கு படத்தில் பிஸியாகி விட்டார். இயக்குநர் ஷங்கரிடம் இயக்குநர் பயிற்சிபெற்ற எஸ்.பி.ஹோசிம் இயக்கும் இந்தப் படத்தை தொடர்ந்து சாந்தனு தனது தந்தையான இயக்குநர் பாக்யராஜ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார்.




மகனுக்காக பாக்யராஜ் ரீ-மேக் செய்யும் படம் சுவரில்லாத சித்திரங்கள். கதையமைப்பு உள்ளிட்ட பணிகள் முடிந்துள்ள நிலையில் மகன் சாந்தனுவுக்கு ஏற்ற ஜோடியை தேடும் படலத்தில் இறங்கியிருக்கிறாராம் பாக்யராஜ்.

# உலகம் முழுவதும் சுற்றுச் சூழல் கல்விக்கு அதிகரிக்கும் வரவேற்பு

தீவிரவாத மோதல்களின் பாதிப்புக்களை விட கொடூரமானதாக சுற்றுச் சூழல் மாசடைந்து கொண்டிருக்கிறது. தமக்கு என்று பாதிப்பு வரும் வரை மற்றவருக்கு ஏற்படும் பாதிப்புக்களை நாம் அலட்சியம் செய்து விடுகின்றோம்.

சுற்றுச்சூழல் மாசடைவது, வெளிப்பார்வைக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிவதாகவும் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுவதாகவோ இல்லாமல் போவதாலும் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை அறியாமலே அது நம்மை பாதிப்பதாலும் அதற்குத் தரப்படவேண்டிய முக்கியத்துவம் தரப்படாமலே போய்க்கொண்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை சூழல் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரிவினருக்கு மட்டும் உரிய துறையாகக் கருதப்பட்டு வந்தது.

எனினும் அண்மையில் இந்தோனேசியாவில் பாலி நகரில் இடம்பெற்ற ஐ.நா.வின் தட்ப வெப்பநிலை குறித்த மாநாட்டின் பின்னர் சூழலைப் பாதுகாப்பதற்கான கடமை ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது என்ற செய்தி இடித்துரைக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் சுற்றுச் சூழலைத் தூய்மைப்படுத்த 190 நாடுகளில் ஒத்துழைப்புடன் பொதுவான உத்தியை வரையறுத்ததன் மூலம் இந்த மாநாடு முடிந்துள்ளது.

உலகம் முழுவதும் சுற்றுச்சூழலுக்கு கொடுக்கப்பட்டு வரும் முக்கியத்துவத்தை உணர்த்தும் சில விடயங்களும் அண்மையில் நடந்தேறின. அண்மையில் அமைதிக்கான நோபல் பரிசு அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதி அல்கோருக்கும் ஐ.நா.வின் தட்பவெப்பநிலை மாற்றத்துக்கான அரசாங்கங்களுக்கிடையேயான குழுவிற்கும் கூட்டாக வழங்கப் பட்டமை இதற்கு ஒரு உதாரணம்.

தட்ப வெப்ப நிலை மாற்றத்தால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதற்காக இந்த அமைப்பிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல் கல்வி

மாணவர்களைப் பொறுத்தவரை வருங்கால தூண்களாக அவர்களின் கையில் தான் சுற்றுச்சூழலை காக்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது.

சுற்றுச் சூழல் சீர்கேட்டிற்கு எதிராக போராடவேண்டிய தருணமான இந்த நேரத்தில் சுற்றுச்சூழல் தொடர்பாக உயர் கல்வியைப் படிப்பது மாணவர்களின் இலட்சியத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

இந்தியா,பிரிட்டன்,அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் சுற்றுச்சூழல் சார்ந்த படிப்புக்களுக்கு மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்து வருகின்றது.

இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் இளநிலை, முதுகலை பட்டப்படிப்பு பிரிவுகள் உள்ளன. சுற்றுச்சூழல் அறிவியல் மட்டுமல்லாது வேறு பல படிப்புகளிலும் மாணவர்கள் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

## சுற்றுச்சூழல்

மேலாண்மை,வனப்பாதுகாப்பு என சுற்றுச்சூழல் சார்ந்த ஏராளமான படிப்புகள் உள்ளன.

தங்களுடைய கல்வித் தகுதிக்கு ஏற்ற சுற்றுச்சூழல் சார்ந்த




படிப்பு களை மாணவர்கள் தெரிவு செய்து படிப்பது நல்லது. அதேநேரம் சுற்றுச் சூழல் படிப்பை தேர்ந்தெடுக்க விரும் பும் மாணவர்கள் அவர்கள் கல்லூரிகளில் சேர்வதற்கு முன் சில ஆய்வுகளை மேற்கொள்வது அவசியம்.

சில படிப்புகள் முழுக்க முழுக்க அறிவியல் சார்ந்ததாக இருக்கும். பிற படிப்புகள் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதனால் உங்களின் கல்விப் பின்னணியைச் சார்ந்து அதற்கேற்ற படிப்பை தேர்வு செய்வது நல்லது.

பொதுவாக சுற்றுச்சூழல் படிப்புகளில் பாடத்திட்டங்கள் எளிமையாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் உள்ளன.

## தொழில் வாய்ப்புகள்

சுற்றுச்சூழல் துறையில் பணியாற்ற அத்துறை சார்ந்த கல்வியில் சேர்வது முதல் படியாக இருக்கும். நீங்கள் கற்கும் கல்வியை சார்ந்தே எந்தத்துறையில் ஆர்வம் அதிகமாக இருக்கிறது என்பதை நிர்ணயம் செய்ய முடியும். வன விலங்குகள் பற்றிய இதழ்களில் எழுத்தாளர்,சுற்றுச் சூழல் ஆராயச்சியாளர் என உங்களுடைய பணி வாய்ப்புகளை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

உலகம் முழுவதும் சுற்றுச் சூழல் படிப்பை முடித்தவர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் இது தொடர்பான படிப்பை முடித்தவர்களுக்கான பணி வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

ஏழை நாடாக இருந்தாலும் பணக்கார நாடாக இருந்தாலும் ஒவ்வொரு நாட்டிலும் சுற்றுச்சூழல் மிகக் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அதனால் அடிமட்ட அளவிலும் இலாபம் எதிர்பார்க்காத அரச சார்பற்ற நிறுவனங்களிலும் சுற்றுச்சூழல் படிப்பை முடித்தவர்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

வர்த்தக நிறுவனங்கள் தங்களுடைய வர்த்தக செயற்பாடுகளில் சுற்றுச் சூழல் பாதுகாப்பை இணைப்பது குறித்து ஆலோசித்து வருகின்றன.

அதனால் சுற்றுச்சூழல் துறை என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் மட்டும் பணியாற்றக்கூடிய காலம் போய்விட்டது. அதற்கு மாறாக ஒரு போதும் இல்லாத அளவிற்கு சுற்றுச்சூழல் தொடர்பான பணி வாய்ப்புகள் அதிகரித்துள்ளதுடன் இத்துறையில் நல்ல ஊதியமும் அளிக்கப்படுகிறது.

எனவே சுற்றுச்சூழல் தொடர்பான பணிகளில் சேர விரும்புவர்கள் அது சார்ந்த படிப்புகளில் சேர்ந்து தங்களைப் பட்டைதீட்டிக்கொள்ளலாம்.

இதன் மூலம் வரும் காலத்தைச் கட்டிக்காப்பதில் தங்களுக்குரிய பங்களிப்பை அவர்கள் உறுதி செய்து கொள்ளலாம்.

## பயங்கர விளைவு

தொழிற்சாலை,வாகனப் புகை உட்பட பல்வேறு மாசுக்களால் பூமி வேகமாக வெப்பமயமாகி வருகிறது.

இதனால் பருவ நிலையில் மாற்றம் ஏற்பட்டு அனல் காற்று வீசுவதும்,புய்ல்,சூறாவளித் தாக்குதல்,காட்டுத்தீ போன்ற இயற்கைப் பேரழிவுகள் அதிகரித்துள்ளன. வெப்ப மயத்தால் ஏற்படும் பின் விளைவுகளால் உலகளவில் இப்போது ஆண்டுக்கு 3 இலட்சம் பேர் இறப்பதாகவும் ஆண்டுக்கு 30 கோடி மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நிலை நீடித்தால் 2030 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெப்பமடைவதால் ஏற்படும் பேரழிவுகளால் இறப்போர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

இதன் படி இறப்போரின் எண்ணிக்கை ஆண்டுக்கு 5 இலட்சமாக உயரும்.

இம் மாற்றத்தால் உலகளவில் இப்போது ஆண்டுக்கு 18 இலட்சம் கோடி ரூபாவிற்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்போது நாம் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம்.இது தொடர்பான உலகளவில் உடனடியாக விவாதித்து மனித இனத்தைக் காப்பாற்ற முக்கிய முடிபு எடுக்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதி முன்னணியில் இருக்கின்றன.

ஐரோப்பாவைப் பொறுத்தளவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உதவக்கூடிய வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

வருடா வருடம் யூன் 5 ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினமாக கொண்டாடப்படுகிறது. அன்றைய தினத்தை வானிலை சவாலை எதிர்கொள்ள ஒன்றுபட வேண்டும் என பல அறிவுறுத்தல்கள் முன்வைக்கப்படுவதோடு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு தினமாக ஐக்கிய நாடுகள் சபை பயன்படுத்தி வருகின்றது.

கிருஷ்ணி இஃபாம்.கந்தசாமி

அரசியல் கவனத்தையும் மற்றும் செயல் முறைகளையும் அதிகரிக்கவும் இந்த நாள் பயன்படுகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது.

அதற்கு ஏற்ப இளைஞர்களும் குழுக்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தொழில் வர்த்தக ஊடக அமைப்புகளும் சுற்றுச்சூழலை மேம்படுத்தி அதை பாதுகாப்பதில் தங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

எல்லா மனிதர்கள்ளையும் நம்பிவிடுவது ஆபத்து.
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து
– ஓர் அறிஞர்

வலம்புரி

## ஜெனரல் சரத் பொன்சேகா எழுதிய கடிதம் அரசையும்-இராணுவத்தையும் பகைக்கவைக்கும்

நாட்டின் ஜனநாயகத்தை காப்பாற்ற இராணுவத்தினர் பாடுபட வேண்டும் என விளித்து முற்படைகளின் தலைமை அதிகாரிப் பதவியில் இருந்து இராஜினாமா செய்த ஜெனரல் சரத் பொன்சேகா; படையினருக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கூடவே, நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளேன் என்றும் அக் கடிதத்தில் அவர் எழுதியுள்ளார்.

இதில் இருந்து ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பது உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பதென்ற முடிபுக்கு பின்னரே அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார் என்பது ஊகிக்கக் கூடிய முடிபாக இருந்தாலும்,

அரச தரப்பின் செய்திகள் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பையும், சரத் பொன்சேகாவையும் விலத்தி வைத்து பரப்புரை செய்ததால், சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமலும் இருந்து விடலாம் என்ற சந்தேகத்தை தந்தது.

ஆனால் சந்தேகங்களுக்கு முடிவுகட்டும் வகையில், ஜனாதிபதித் தேர்தலில் தான் குதிக்கப் போவதை தெரியப்படுத்தும் வகையில் சரத் பொன்சேகா படையினருக்கு எழுதிய கடிதம் அமைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு மகிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் போட்டியிட்டால் தேர்தல் பிரசாரத்தின் விவாதப் பொருளாக 'நடந்து முடிந்த யுத்த வெற்றிக்கு காரணம் ஜனாதிபதியா?–படையினரா?' என்பதாக இருக்கும்.

யுத்த வெற்றியில் படையினரை இரண்டாவது இடத்துக்கு அழைத்துச் சென்றால் அது படையினரையும், அவர்களின் குடும்பத்தினரையும் சீண்டுவதாக அமையும்.

அத்தகைய பிரசாரம் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு சாதகமாகிவிடும்.

எனவே நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் அரசையும் படையினரையும் வேற்றுப் படுத்தி பார்ப்பதாக அமையவிருப்பதால் அது நாட்டுக்கு ஆரோக்கியமாக அமையாது என்பது தெளிவு.

இலங்கையில் தேர்தல் வரலாற்றில் பல்வேறு சிக்கல்கள், மோதல்கள் நடந்த பதிவுகள் உண்டு.

ஆனால் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா போட்டியிட இருப்பதால் நிலைமை சாதாரணமாக அமையாது.

இதனை உறுதி செய்வதாக சரத் பொன்சேகா படையினருக்கு எழுதிய கடிதம் அமைகின்றது.

'நாட்டில் ஜனநாயகத்தை காப்பாற்றவே எனது பதவியை இராஜினாமா செய்தேன்' என்பதும் ஜனநாயகத்தை பாதுகாக்க இராணுவத்தினர் பாடுபட வேண்டும் எனவும் சரத் பொன்சேகா விடுத்த கோரிக்கை நாட்டில் தற்போது ஜனநாயகம் இல்லை என்பதை சூச்சுமமாக சொல்லி நிற்கின்றதல்லவா?

அப்படியானால் சரத் பொன்சேகா நினைப்பது நமக்கும் புரிகிறது அல்லவா?

# 17 ஆயிரத்து 174 பட்டதாரிகளுக்கு விரைவில் அரச சேவை நியமனம்

## அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தகவல்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் மேலும் 17 ஆயிரத்து 174 பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படவிருப்பதாக நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதில் மக்கள் சபை செயலாளர்களாக 14 ஆயிரம் பேரும் கலைப்பட்டதாரி ஆசிரியர்களாக 3 ஆயிரத்து 174 பேரும் நியமனம் பெறவுள்ளனர்.

கலைப்பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்வரும் ஜனவரி முதல் ஆசிரிய சேவையில் நியமனம் பெறவுள்ளனர்.

மக்கள் சபை செயலாளர்களை விரைவில் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது எனவும் இதற்கான தகுதிக்காண் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## பரிசளிப்பு விழாவும் கணிப்பீட்டறிக்கை வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு நிகழ்வும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிரேஷ்ட ஆசிரியர் வி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறி பார்வதி வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் க.சிவராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு நிகழ்வும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும் இன்று மாலை 4 மணிக்கு சிரேஷ்ட ஆசிரியர் தமிழ்மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச கிராம சேவை அதிகாரி திருமதி இராகினி இராமலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைத்துப் பெற்றோர்களும் கலந்து கொண்டு தங்கள் பிள்ளைகளின் கணிப்பீட்டு அறிக்கையை பெறுமாறு இயக்குநர் கேட்டுள்ளார். (ஓ-9)

## 50 இராணுவ உயரதிகாரிகளுக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம்

(கொழும்பு)

இராணுவத்தில் பதவி வகிக்கும் 50 உயர் அதிகாரிகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி உயர்வுகளுடன் இடமாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, 22 பிரிகேடியர்கள், 20 கேணல்கள், 7 லெப்டினனட் கேணல்கள் மற்றும் மேஜர் ஒருவரும் அடங்கலாக 50 உயரதிகாரிகளும் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. சில அதிகாரிகளுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட பொறுப் புக்கள் அகற்றப்பட்டு நிரந்தரப் பொறுப்புக்கள் வழங்கப்பட் டுள்ளன.

ஜகத் ஜயசூரிய புதிய இராணுவத் தளபதி பதவியைப் பொறுப்பேற்றதன் பின்னர் இராணுவத்தில் மேற்கொள்ளப்படும் பாரிய கட்டமைப்பு மாற்றம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனம் யாழ். மாவட்டத்தின் கட்டடப்பாவனைக்கான பாகங்களையும் சட்டங்களையும் முன் வடிவமைத்தலுக்கும் உற்பத்திக்குமான அறிமுகம் எனும் பொருளில் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஈறோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் DURRO கட்ட அமைப்புக்கள் நிறுவன பொது முகாமையாளர் எந்திரி பாலித்த ரணசிங்கே கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ-9)


## யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் பார்வை நேரம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)


யாழ். போதனா வைத்தியசாலை விடுதியிலுள்ள நோயாளர்களை பார்வையிடும் நேரம் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதியில் இருந்து மாற்றப்பட்டுள்ளதாக போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி நண்பகல் 12 மணியிலிருந்து 1 மணி வரையும், மாலை 4 மணியிலிருந்து 5 மணிவரையும் நோயாளரை பார்வையிட முடியும். காலை 6 மணியிலிருந்து 6.30 மணி வரை நோயாளருக்கு உணவு வழங்குவதற்கு உறவினர் மட்டும் அனுமதிக்கப்படுவர் என்றும் நோயாளரை பார்வையிட அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை சகல பார்வையாளர்களும் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-9)




# நீ அரசன் தானோ ?



குடிகளை அன்போடு அனைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறும்.

இந்திய வரலாற்றிலே பாபர், அக்பர், ஷாஜகான், அசோகர், சந்திரகுப்தர், சேர, சோழ, பாண்டிய அரசர்கள் என்றும்; உலக வரலாற்றிலே எகிப்துப் பேரரசு, பாபிலோனியப் பேரரசு, கிரேக்கப் பேரரசு, உரோமானிய அரசு முகலாய, ஆங்கில அரசு என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் அது என்ன? கிறிஸ்து அரசர், இறையரசு எப்படிப்பட்ட அரசர்; எப்படிப்பட்ட அரசு?

ஆம் இன்றைய நற்செய்தியிலும் இது பற்றித்தான் கூறப்படுகிறது.

### பரமபிதா காட்டிய பாதை

அதாவது இயேசு கிறிஸ்து அரசர் மண்ணாக அரசர்களைப் போன்று அடக்கி ஆளவந்த அரசர் அல்லர் ; அன்பு செய்து அரவணைக்க வந்த அன்பின் அரசர். நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் என்றார். வாடிய பயிரைக் கண்டபோதேல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் பொன் மொழிகளுக்கேற்ப வாடிய மக்கள் மீது இரக்கம் கொண்ட இரக்கத்தின் அரசர் அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப் போல் தவித்துக் கிடந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டேன் என்றார்.

யேசு கிறிஸ்து ஏழைகளின் தெருக்களில் நடந்து ஏழைகளின் சிரிப்பில் தந்தை இறைவனைக் கண்ட ஏழை களின் அரசர். ஏழைகளோ நீங்கள் பேறு பெற்றோர் ; ஏனினல் இறையாட்சி உங்களுக்கு உரியதே என்றார். இன்று இந்த ஏழைகளின் அரசர் கூறும் செய்தி என்ன? உன்னுடைய வீடு கடவுளின் அரசாக இருக்க வேண்டும் என்றால் அன்பு அவ்வீட்டின் கூரையாகவும் அறச்செயல்கள் அவ்வீட்டின் பக்கச் சுவர்களாகவும் இருக்கட்டும் என்ற ஆன் என்பவரின் கூற்றிற்கேற்ப நாம் அன்பையும் , அறனையும் கொண்டு வாழும் போது தான் இறையாட்சியின் சொந்தக்காரர்களாக வாழ்வோம். அப்போது தான் கிறிஸ்து அரசரின் விழா நமக்கு அர்த்தத்தைக்கொடுக்கும். அந்த கிறிஸ்து அரசர் நம் உள்ளங்களிலும், நம் இல்லங்களிலும் இருந்து ஆட்சி செய்து நம்மை நல்ல ஆயனாக வழி நடத்துவார்.

ஜோன் எ பேர்ட்




27ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவும்
15ஆம் மாத நினைவஞ்சலியும்

## அமரர் நடராசா - மருஜன்



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 22 | 21 |
| 11 | 08 |
| 1982 | 2008 |

அன்புச் செல்வமே
ஆறாமல்த் தவிக்கின்றோம்
இன்பமாய் நீ வாழ்ந்தாய்
என இரக்கமின்றி உனை அழித்தனர்
உடு நகர் தந்த உத்தமனே
ஊரை விட்டு எங்கு சென்றாய்
எப்பொழுது வருவாய் என
ஏங்கியே நிற்கின்றோம்
ஐயம் என்னவென அறியாதவனே

ஒரு முறை வந்து எமைப் பாராயோ
ஓங்காரமாய் வாழ்ந்தவனே
துணை கரம் தேடிச் சென்றாய்
உன் துணையவள் தூர
தேசம் அனுப்பிவிட்டாளே

ஆதியாமலை, சேச்றோட்,
உடுப்பிட்டி.

உன் பிரிவால் துயருற்று உன் மறு பிறவிக்காய்
காத்திருக்கும் கண் அயராத உன்
அப்பா,அம்மா, சகோதரர்கள் (நிருஜன், ஜான்சன்)
சகோதரிகள் (மயூரி, கஸ்தூரி, நியூரி)
மைத்துனன் (உதய கோகுலன்)

(3932)




## வலம்புரி

அன்பு விளம்பரதாரர்களே!

உங்கள் விளம்பரங்களை வலம்புரியின் வர்ணப்பக்கத்தில் பிரசுரிக்க அரியதோர் சந்தர்ப்பம். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

- விளம்பரப்பகுதி



# 2010 உலகக் கிண்ண கால்பந்தாட்டம்
# சுலோவேனியாவிடம் வீழ்ந்து ரஷ்யா அவுட்

ரஷ்ய கால்பந்து அணி அடுத்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடருக்கு தகுதி பெறும் வாய்ப்பை பரிதாபமாக இழந்தது.

2010ஆம் ஆண்டு யூன் 11ஆம் திகதி முதல் யூலை 11ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

இத்தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் கடந்து 2007ஆம் ஆண்டு ஆரம்பமாகியது.மொத்தம் உள்ள 32 இடங்களுக்கு உலகின் 204 அணிகள் மோதின.

### சுலோவேனியா அபாரம்

இத்தொடரில் கடந்த 18ஆம் திகதி சுலோவேனியாவிலுள்ள மரிபர் நகரில் நடந்த தகுதிச் சுற்றுப் போட்டியில் கத்துக்குட்டி சுலோவேனியா அணியை ரஷ்ய அணி சந்தித்தது.

இப் போட்டியில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய ரஷ்ய அணி 0:1 என்ற கணக்கில் சுலோவேனியா அணியிடம் வீழ்ந்து உலகக்கிண்ணதொடருக்கான வாய்ப்பையிழந்தது.

உலக கால்பந்தாட்ட தரவரிசையில்தற்போது 12ஆவது இடத்திலுள்ள ரஷ்ய அணி கடந்த 1994,2002 உலகக் கோப்பைத் தொடருக்கு தகுதி பெற்றது.2006ஆம் ஆண்டு தகுதி பெறத்தவறிய ரஷ்ய அணி மீண்டும் இம்முறையும் வாய்ப்பையிழுந்தது.

### ஹென்றி தவறு

இதேவேளை கடந்த 18ஆம் திகதி பிரான்ஸ் செயின்ட்டெனிசில் நடந்த மற்றொரு தகுதிச் சுற்றுப் போட்டியில் பிரான்ஸ்,அயர்லாந்து அணிகள் மோதின.

இப்போட்டி சமனிலையில் முடிபடைந்த நிலையில் ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் பிரான்ஸ் அணி உலகக்கிண்ண தொடருக்கு தகுதிபெற்றது.

எனினும் இப்போட்டியில்பிரான்ஸ் அணித் தலைவர் ஹென்றி பீரி–கிக் வாய்ப்புக் கிடைத்த போது பந்தைப் பாஸ் செய்ய வில்லியம்ஸ் காலாஸ் கோல் அடித்தார்.

இதன்போது பந்து ஹென்றியின் கையில் பட்டுச் சென்றது. எனினும் கால்பந்து விதிமுறைப்படி கையில் படக்கூடாது.அப்படியிருக்க பிரான்ஸ் அடித்த கோலை நிராகரிக்க வேண்டுமென அயர்லாந்து வீரர்கள் வாதாடினர்.

எனினும் இக்கோரிக்கையை ஏற்க சுவிடன் நடுவர் மாட்டின் ஹான்சன் மறுத்துவிட்டார்.தவறு செய்த ஹென்றிக்கு தடைவிதிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்தது.

### மோதும் 32 அணிகள்

உலகக் கிண்ண கால்பந்தாட்ட தகுதிச் சுற்றுப்போட்டிகள் முடிபடைந்த நிலையில் தொடருக்கு தகுதி பெற்ற 32 அணிகள் விபரம் வருமாறு.

**ஆசியா**

அவுஸ்திரேலியா, யப்பான், தென்கொரியா,வடகொரியா,

**ஆபிரிக்கா**

அல்ஜீரியா, ஐவரிகோஸ்ட், நைஜீரியா, கமரூன்,கானா,தென்னாபிரிக்கா

**ஐரோப்பா**

டென்மார்க், பிரான்ஸ்,கீரிஸ், நெதர்லாந்து,சேர்பியா,சுலோவேனியா,சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து,ஜேர்மனி,இத்தாலி,போத்துக்கல், சுலோவேக்கியா,ஸ்பெயின்

**வடமத்திய அமெரிக்கா**

**கரிபியன்**

ஹோண்டுராஸ்,அமெரிக்கா, மெக்சிக்கோ, ஒசியானியா

**தென்அமெரிக்கா**


ஆர்ஜென்டினா, சிலி, உருகுவே, பிரேசில், பராகுவே.

போட்டியை நடத்தும் நாடுகள் என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணி நேரடியாகத் தகுதி பெற்றது.

# சாதனைகளுடன் முடிபடைந்த முதலாவது டெஸ்ட் போட்டி

(அகமதாபாத்)

இலங்கை–இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இரு அணி வீரர்களும் சாதனைகளை படைப்பதற்கு களமமைத்துக்கொடுத்த போட்டியாக இதனைக் கருதலாம்.காரணம் இதில் பல சாதனைகளை இரு அணி வீரர்களும் படைத்துள்ளனர்.



அகமதாபாத்தில் நடைபெற்ற இலங்கை–இந்திய அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் ராகுல் டிராவிட் 177 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் 11000 ஓட்டங்களைக் கடந்துள்ளார்.135ஆவது டெஸ்ட் போட்டியில் 234ஆவது இன்னிங்ஸில் விளையாடும் டிராவிட், சச்சின் டெண்டுல்கர் ,அலன்போர்டர், பிரைன் லாரா, பொன்டிங் ஆகியோருக்கு அடுத்தபடியாக இவர் உள்ளார்.இதன் மூலம் 27 சதங்களையும், 57அரைச்சதங்களையும் பெற்றுள்ளார்.

திலகரட்ண டில்சான் 112 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் டெஸ்ட் போட்டியில் தனது 10ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.மேலும் இந்த ஆண்டில் இவர் பெறும் 5ஆவது சதம் இது என்பதோடு இந்தியாவுக்கு எதிராக இவர் பெறும் முதலாவது சதம் இதுவாகும்.

சாதனை படைக்கும் இணைப்பாட்டமாக பிரசன்ன–மஹேலவின் இணைப்பாட்டம் (351) ஓட்டங்கள் காணப்படுகின்றது. பிரட்மனும்–பிங்கில்டனும் 72 வருடகாலம் தம் வசம் வைத்திருந்த இணைப்பாட்ட சாதனை வரலாற்றை 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்து இவ்விரு வீரர்களும் அதனை முறியடித்துள்ளனர்.இது மட்டுமன்றி இந்த இணைப்பாட்டம் எந்தவொரு அணியினாலும் இந்திய அணிக்கெதிராக பெறப்பட்ட 3ஆவது பெரிய இணைப்பாட்டமாகும்.

இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிப் பெற்ற மொத்த ஓட்ட எண்ணிக்கையானது இந்திய மண்ணில் பெறப்பட்ட மிகக்கூடுதலான ஓட்ட எண்ணிக்கையாகும்.இதற்கு முன் இந்திய அணி 23வருடங்களுக்கு முன் இலங்கை அணிக்கெதிராக 676 ஓட்டங்களை குவித்ததே இதுவரை சாதனையாகவிருந்தது.அத்துடன் இலங்கை அணியினால் வெளிநாடொன்றில் பெறப்பட்ட மிகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது டெஸ்ட் போட்டியில் 5ஆம் நாள் ஆட்டத்தின் போது சச்சின் டெண்டுல்கர் தனது 35 ஆவது ஓட்டத்தைக்கடந்த போது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 30 ஆயிரம் ஓட்டங்களை பெற்ற வீரர் என்ற புதிய சாதனையை நிலைநாட்டினார்.160 டெஸ்ட் போட்டிகள், 436 ஒரு நாள் போட்டிகள்,ஒரு இருபது–20 போட்டியிலும் விளையாடியுள்ள சச்சின் இது வரை டெஸ்ட் போட்டிகளில் 12ஆயிரத்து 812 ஓட்டங்களும், ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் 17,178 ஓட்டங்களையும்,ஒரு இருபது–20 போட்டிகளில் 10ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே இவ்வாறான பல சாதனைகள் படைத்த வீரர்கள் இன்னும் இரு போட்டிகளில் சாதனைகள் படைப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அகமதாபாத் ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு எந்தவகையிலும் கைகொடுக்காததால் 5நாட்களில் வெறும் 21விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தப்பட்டன.அதேசமயம் மொத்தம் 1598 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன.இரு அணியையும் சேர்த்து 7சதங்கள் விளாசப்பட்டுள்ளன. இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு டெஸ்டில் 7பேர் சதம் காண்பது இதுவே முதல் முறையாகும். இந்தியாவின் முதல் இன்னிங்ஸில் டிராவிட் (177),தோனி (110),இலங்கை முதல் இன்னிங்ஸில் டில்சான் (112),மஹேல ஜெவர்த்தன (275), பிரசன்னா ஜெயவர்த்தன (154) இந்தியாவின் 2வது இன்னிங்ஸில் காம்பீர் (114),டெண்டுல்கர் (100) ஆகியோர் இந்த டெஸ்ட்டில் சதமடித்துள்ளனர்.

# தோனியின் ராசியான நம்பர்-5

(அகமதாபாத்)

ஒரு நாள் போட்டியில் இந்திய அணித்தலைவர் தோனி எந்த வரிசையில் களமிறங்குவது என்ற குழப்பம் நீடிக்கின்றது.இவர் முன்வரிசையில் களமிறங்க வேண்டும் என கங்குலி உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் தோனி தொடர்ந்து 5ஆவது வீரராகவே களமிறங்குகின்றார். துடுப்பாட்ட வரிசையில் இவருக்கு பொருத்தமான இடம் எதுவென்று பார்ப்போம்.

### மூன்றாவது வீரராக

கடந்த 2004ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரில் அறிமுகமான இந்திய அணித்தலைவர் தோனி இதுவரை 151ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 5சதம், 33அரைச் சதம் உட்பட 4954 ஓட்டங்களை எடுத்துள்ளார்.இவர் முந்தைய நாட்களில் 3ஆவது அல்லது 4ஆவது வீரராக களமிறங்கினார்.

அப்போதுதான் பாகிஸ்தான் அணிக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடந்த போட்டியில் 148 ஓட்டங்களை எடுத்தார்.

**தோனியின் துடுப்பாட்ட அவதாரம்**

| வரிசை | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி | சதம்/ அ.சதம் |
|---|---|---|---|---|
| நம்பர்-3 | 15 | 921 | 83.72 | 2/5 |
| நம்பர்-4 | 12 | 708 | 88.50 | 1/8 |
| நம்பர்-5 | 27 | 1065 | 50.71 | 1/5 |
| நம்பர்-6 | 47 | 1395 | 38.75 | 0/9 |
| நம்பர்-7 | 24 | 589 | 39.26 | 1/4 |

இலங்கை அணி க்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 183ஓட்டங்களை எடுத்து தனது அதிகபட்ச ஸ்கோ ரைப் பதிவு செய் தார்.இவர்3 ஆவது அல்லது 4ஆ வது வீரராக கள மிறங்கிய போது சிறப்பாகச் செயல்பட்டதால்தான் முன்வரி சை



யில்வரவேண்டும் என வழியுறுத் தப் பட்டது.

### ஐந்தாவது வீரராக

இருப்பினும் தோனி அதிக போட்டியில் 5ஆவது அல்லது 6ஆவது வீரராக களமிறங் கியுள்ளார்.இவர் இது வரை 27போட்டியில் 5ஆவது வீரராக களமிறங்கி 1065 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

6ஆவது வீர ராக 47போட்டிகளில் களமிறங்கி 1395 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இவர் சமீபத்தில் அவுஸ்திரேலி யாவுக்கெதிராக நாக்பூரில்நடந்தஒருநாள் போட்டியில் 5 ஆவது வீரராக களமிறங்கினார்.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 124 ஓட் டங்களை எடுத்து 12ஆவது முறை யாக ஆட்டநாயகன் விருதை வென் றார்.

இதன் மூலம் 5 ஆவது வீரராக துடுப்பாட்டம் செய்து முதன்முதலில் ஆட்டநாயகன் விருதை வென்றார்.

### ராசியான நம்பர் 5

சர்வதேச அளவில் இங்கிலாந்தின் பிளின்டொப், கொலின்வூட், அவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ், இந்தியாவின் யுவராஜ் சிங், டிராவிட், தென்னாபிரிக்காவின் ஜான்டிரோட்ஸ், குரோன்ஜே, பாகிஸ்தானின் இன்சமாம், மேற்கிந்தியத் தீவு அணியின் சந்தர்போல் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் 5 ஆவது வீரர்களாக களமிறங்கி 1000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து அசத்தியுள்ளனர்.

தோனியின் வாழ்க்கையில் 7ஆம்நம்பர்தான் ராசியானது. அவர் 7ஆம் திகதியில் பிறந்தவர். ஆனால் கிரிக்கெட்டில் இவருக்கு 5ஆம் இடம்தான் ராசியானதாக உள்ளது. இதனால் தான் 5ஆவது வீரராகவே களமிறங்குகின்றார்.



ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரிகிளை திறப்புவிழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.

### மீள் குடியமர்த்தப்பட்ட மாணவர்களின்

# க.பொ.த. (சா/த) பரீட்சை விண்ணப்பம் ஏற்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மீள்குடியமர்த்தப்பட்ட மாணவர்களில் இவ்வாண்டு க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பங்களை நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் கையளிக்க முடியுமென யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு தற்போது யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்டு அல்லது உறவினர் நண்பர்களுடன் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களும் அடங்குவர்.

இதில் பாடசாலைகள் ஊடாகவும் தனிப்பட்ட முறையிலும் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் மற்றும் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர கணித பாட மீள் பரீட்சைக்கு தோற்றுபவர்களும் உள்ளார்கள். எனவே மேற்கூறப்பட்ட முறைகளில் யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கின்றவர்கள் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ச-5)

# ஜனாதிபதித்தேர்தலை முன்னிட்டு தெற்கில் கருத்துக் கணிப்பு

(கொழும்பு)

லங்கா இ நியூஸ் இணைத்தளம் தென்னிலங்கையில் மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கான ஆதரவு ஜனாதிபதி மகிந்தவைவிட அதிகமானது என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் லங்கா இ நியூஸ் வெளியிட்ட கருத்துக் கணிப்பு விபரம் வருமாறு இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு அதிகம் என்பது தொடர்பான கருத்துக் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

எமது வாக்கெடுப்பில் 56 வீதம் ஆண்களும் 44 வீதம் பெண்களும் பங்குபற்றி இருந்தனர். இந்த வாக்கெடுப்பில் 24 வீதமானோர் மகிந்தாவுக்கு ஆதரவாகவும் 28 வீதமானனோர் பொன்சேகாவுக்கும் ஆதரவாகவும் வாக்களித்திருந்தனர்.

மகிந்தவுக்கு ஆதரவு வழங்கியவர்களில் 83 வீதம் ஆனவர்கள் பெண்கள், பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியவர்களில் 100 வீதம் ஆனாவர்கள் ஆண்கள்.

எனினும் எவரை ஆதரிப்பு என்பது தொடர்பில் தற்போது முடிபு எடுக்க முடியவில்லை என 48 வீதமானவர்கள் தெரிவித்துள் ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்..

ட்தில் இருந்து ஏ-9 வீதியூடாக பஸ்களில் வெளிமாவட்டங்களுக்கு பயணிப்பதற்கு என சுமார் 3 ஆயிரம் பேர் வரை நேற்றுக் காலை யாழ். புகையிரத நிலையத்திற்கு வருகை தந்தனர். இதில் பரீட்சைக்கு நேர்முகத் தேர்வுக்காக கொழும்பு செல்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

ஏனையோர் பஸ்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பயணிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் 21 பஸ்கள் சேவையில் ஈடுபட தயாராக இருந்த போதும் பின்னர் பயணிகளின் எண்ணிக்கைகளின் பிரகாரம் மேலும் 9 பஸ்கள் கூடுதலாக வரவழைக்கப்பட்டது.

இதில் காலை 9 மணிக்கு ஒரு பஸ்ஸும் பிற்பகல் ஒரு மணிக்கு 14 பஸ்களும் மூன்று மணிக்கு 15 பஸ்களும் ஏ-9 வீதியூடாக அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும் 30 பஸ்களில் ஆயிரத்து 655 பயணிகள் மாத்திரமே வெளிமாவட்டங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனையோரை இன்று வருமாறு திருப்பி விடப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு சொகுசு பஸ்கள் உட்பட 6 பஸ்கள் கொழும்புக்கும் ஏனைய 24 பஸ்களும் வவுனியா, மதவாச்சி வரையான சேவையில் ஈடுபட்டது என யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவிதுள்ளன.

இதேவேளை 16 வயதுக்கு குறைந்தவர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கு அஞ்சல் அறிமுக அட்டை வைத்திருப்பதுடன் பெற்றோர் அல்லது உறவினர்களுடன் செல்லவே அனுமதிக்கப்படுகின்றனர்.

சிறுவர்கள் எந்தவித பதிவுகளையும் மேற்கொள்ளாது பயணத்தை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

இன்னும் 10 நாட்கள் மட்டுமே!
அமெரிக்கன் விசாவிற்கான தங்கள் அதிஸ்டத்தை பரீட்சிக்க
உடன் நாடுங்கள்
தங்கள் பாஸ்போட் அளவிலான படத்துடன்
உள்நாட்டு வெளிநாட்டு கடிதங்கள் பொதிகள் சேவையில்
யாழ் நகரில் முன்னணி வகிக்கும்,
Nokia யாழ் மாவட்ட முகவரான
திருமுருகன் கொம் நெற்
259 கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்
46 ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
T.P No: 021 222 7835
(C-3759)

## தேர்தல் தொடர்பான அறிவிப்பை...

பதை சர்வதேச சமூகமே ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றது.

இந் நிலையில் தேர்தல் அறிவிப்பினை மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டால் கொள்கை விளக்கவுரையில் தேர்தல் முடிபுகளை மாற்றும் விதமான சில முக்கிய திருப்பங்கள் ஏற்படலாம் என்று இலங்கை அரசாங்கத் தரப்பு அச்சமடைந்துள்ளது.

ஆகவே மாவீரர் நாள் உரை நிறைவடையும் வரை தேர்தல் அறிவிப்பைத் தள்ளிப் போட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அரசாங்கம் மாவீரர் நாள் உரைக்கு முன்பாகத் தேர்தல் அறிவிப்பினை வெளியிடும் பட்சத்தில் அதற்கேற்ற வகையில் கொள்கை விளக்கவுரையில் மாற்றங்களை ஏற்படுத்தவும் விடுதலைப்புலிகள் தரப் புத் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இம்முறை வெளியிடப்படவுள்ள விடுதலைப்புலிகளின் கொள்கை விளக்கவுரையானது இலங்கையில் நடைபெறவுள்ள எந்தத் தேர்தல் முடிபினையும் தீர்மானிக்கும் சக்திமிக்கதாகவேயிருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால தமிழ் மக்களின் தெரிவுகள் குறித்துத் தெளிவான முடிபுகளை விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் உரை பிரதிபலிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கை மீது அழுத்தத்தை...

அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு;

எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை முன்னிட்டு அனைத்துலக மன்னிப்புச் சபை இலங்கை தொடர்பான சில கருத்துக்களை முன்வைக்கவுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் மீறல் தொடர்பில் நீங்கள் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பிலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீதான நடவடிக்கைகள், இலங்கையிலுள்ள மக்கள் சந்தித்து வரும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பில் நீங்கள் அக்கறை கொள்ள வேண்டும்.

முகாம்களில் உள்ள மக்கள் விரைவாக விடுவிக்கப்பட வேண்டும். போரின்போது இடம்பெயர்ந்த மக்கள் 6 மாதங்களுக்கு மேலாக அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மக்கள் தங்கியுள்ள முகாம்களின் நிலை மிக மோசமானது.

மக்களைப் பலவந்தமாகத் தடுத்து வைக்கும் கொள்கைகளை அரசு கைவிட வேண்டும். அடிப்படையுரிமைகள் கூட இல்லாத முகாம்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் தற்போதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் சுதந்திர நடமாட்டங்களும் தடுக்கப்பட்டுள்ளன. முகாம்களின் நிர்வாகம் படையினர் வசமேயுள்ளது. படையினர் மக்களின் மருத்துவ தேவைகளைக் கூட தடுத்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி சிறுவர்கள் உட்பட 12 ஆயிரம் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முகாம்களிலிருந்து பிரிக்கப்பட்டு சட்டவிரோத முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் காணப்படும் மேற்கூறப்பட்ட நிலைமைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட உங்களது நாடுகள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தேர்தல்...

படவுள்ளது.

இந்த அலுவலகத்தில் இருந்தே தனது தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளவும் அவற்றை ஒழுங்கிணைக்கவும் அவர் திட்டமிட்டு வருகின்றார்.

பொன்சேகாவின் தேர்தல் பரப்புரைகளுக்கு உதவும் பொருட்டு அமெரிக்காவில் உள்ள அவரது மகளும் மருமகனும் அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஜெனரல்...

அரசாங்கத்திற்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த ஜெனரல் சரத் பொன்சேகாவை அமெரிக்கா ஒரு கருவியாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அண்மையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

சரத் பொன்சேகா அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தபோதும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல்கள் கோரப்பட்ட போதிலும் இலங்கை அரசாங்கம் தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தியது.

இராஜதந்திர கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி அமெரிக்கா செல்லும் இலங்கையின் உயரதிகாரிகளை விசாரணை செய்ய முடியாது என அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நலன்புரி முகாமிலுள்ள மக்களு...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த அறிவிப்பை வெளியிடுவதாகப் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். செட்டிக்குளத்திற்கு விஜயம் செய்த பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான றிசாட் பதியுதீன், பீலிக்ஸ் பெரோரா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இராமநாதன் நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள மக்களுடன் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டனர்.

இதனையடுத்து பசில் ராஜபக்ஷ தெரிவிக்கையில்;

2010 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்குள் நடைமுறையில் உள்ள அனைத்து நலன்புரி நிவாரணக் கிராமங்களிலுமுள்ள மக்கள் அவர்களது சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள்.

அத்துடன் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அங்குள்ள மக்கள் சுதந்திரமாக எவ்வித கெடுபிடியுமின்றி நடமாடும் வகையில் அவை திறந்த முகாம்களாக மாற்றப்படும்.

தற்போது மீள்குடியேறும் மக்களுக்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு 50 ஆயிரம் ரூபாயாக டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படும்.

மேலும் வன்னியிலிருந்து புலிகளின் பிடியிலிருந்து விடுபட்டு அரசாங்கத்தின் பாதுகாப்பைத் தேடி வந்த மக்களுக்கு ஜனாதிபதி தலைமையிலான அரச பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகளும் முழுமனதுடன் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளதை இவர்கள் ஒருபோதும் மறந்து விடமாட்டார்கள்.

நிவாரணக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 80 ஆயிரம் மக்களின் தொகை இன்று 50 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

இதற்கு அரசாங்கத்தின் நேர்மையான தூய்மையான மீள்குடியேற்றக் கொள்கையே காரணமாகும். அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களை மிகவும் துரிதமாக நாம் மீள்குடியமர்த்தினோம்.

இன்று பல நாடுகளிலும் அகதிமுகாம்கள் பல வருடகாலமாக காணப்படுகின்றன. அம் மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் எமது அரசாங்கம் இடம்பெயர்ந்த எம் மக்களது நலனில் அதிகூடிய அக்கறை செலுத்தி உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட ஏனைய தேவைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளது என்றார்.

இந் நிகழ்வில் மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாட் பதியுதீனும் உரையாற்றினார். (ச-3)

யாழ் மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
TCNEx
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
232 நாடுகளுக்கான சேவைகள்
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259,கே,கே.எஸ்,வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
நீங்கள் அனுப்பும் பொருட்களுக்கு காப்புறுதி உண்டு
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
(C-3758)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.